# LAABH SAMACHAR

Volume: 10 | Issue : 05 | AUGUST 2021 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE




SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536



METRO
அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்
மெட்ரோ ஷூ மார்ட்
16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343




TEXMO®
Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps
AQUA GROUP
Authorised Dealer:
Madurai Pipe
76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.
AQUATEX®
Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems
Borewell Submersibles
Single Phase Jet Pumps
Pressure Boosting Systems
Electric Motors
Single Phase Domestic Pumps
Agricultural Monoblocks
Open-well Submersibles




பர்வதா டிரேடர்ஸ்
செல்: 94439 30728
Manufacturer: PP Woven Bags
Size: 26/41, 28/46, 38/46, 40/42, 45/50, 50/55, 55/66
(All sizes available)
*Used second hand Woven bags also available
37, கிருஷ்ணாபுரம் காலனி 3வது தெரு, மதுரை - 625014




Thirumalay Tradings
presents
V Carry Bags
MINIMUM ORDER 100 BAGS.
LOGO PRINTED
MINIMUM ORDER 750 BAGS
To Order: 94438 31496
Plot No.2, Anandha Nivas,
Palanimuthu Nagar,
Villapuram,
Madurai - 625 012. TN. India
* Share in your happiness with your relatives and friends
* Satisfy your customer
* Stylish to carry
* Multipurpose bags
Prop:
S.M. Karthikumaran

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| S.K.B. Chandraprakash | Chairman | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெச்கோ மொன்னு பொறெ*

## நமஸ்கார்...

**'கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்'** என்று மகாகவி பாரதியார் கூறிய கூற்று நம் சமூகத்திற்கு மிகக்கச்சிதமாக பொருந்தும்.

குஜராத்-ல் கஜினி முகமதுவின் படையெடுப்பினால் அங்கிருந்து புலம்பெயர்ந்து பல்வேறு பகுதிகளை கடந்து இறுதியாக விஜயநகரப்பேரரசை அடைந்தோம். அங்கு நம் கைத்தொழிலான கைத்தறி தொழிலின் திறமையை கண்டு தொழில் வாய்ப்புகள் கிடைத்தது.

அத்தொழில் வாய்ப்பின் மூலம் தெற்கு திசை நோக்கி குறிப்பாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளை அடைந்து மீண்டும் நம் சமுதாயத்தை உயர்த்திக்கொண்டோம். மிகப்பெரிய வீழ்ச்சியிலிருந்து நம்மை உயர்த்திக்கொள்வதற்கு மூல காரணம், **கைத்தறி தொழில்**.

**ஆகஸ்ட் 7**, தேசிய கைத்தறி தினமாக நமது பாரதப்பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் கடந்த 2015ல் சென்னையில் தொடங்கி வைத்தார். இந்த தினம், ஆகஸ்ட் 7, 1905-ல் தொடங்கிய சுதேசி இயக்கத்தின் நினைவாக தேசிய கைத்தறி தினம் கொண்டாடப்படுகிறது. இன்று (இந்த மாதம் ஆகஸ்ட் 7) தேசிய கைத்தறி தினத்தை நாடு கொண்டாடும் ஏழாவது ஆண்டு ஆகும்.

நம்மை உயர்த்திய நம் குலத்தொழிலை போற்றுவோம். கைத்தறி நெசவாளர் பெருமக்கள் அனைவருக்கும்

**இனிய கைத்தறி தின நல்வாழ்த்து**க்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

– குமரன் B ஜகுவா

## திருக்குறள்

**நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு**
**இனத்தியல்ப தாகும் அறிவு.**

**பொருள்:** தண்ணீர் எந்த நிலத்தோடு சேர்ந்திருக்கிறதோ அந்த நிலத்தின் சாரமுள்ளதாக மாறிவிடும். அதுபோல இயற்கையாக நல்ல புத்தியுடையவர்களும் அற்பபுத்திக்காரர்களுடன் சேர்ந்தால் கெட்டுப் போவார்கள்.

**அதிகாரம் 46** | **சிற்றினம் சேராமை** | **அரசியல்**

(அறிவு ஒழுக்கத்தில் குறைந்தவருடன் சேராமை)


**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

Kindly Save our **Whatsapp** No:
To get our Correspondence,
Business News / Information,
Govt. Notifictions, Amendments,
New Technology etc.,
**93441 97952**

SOURASHTRA CHAMBER OF COMMERCE
MADURAI

## பொதுச்செயலாளர் அறிக்கை

அங்கத்தினர்களுக்கு வணக்கம்

சேம்பர் அங்கத்தினர்கள் அனைவருக்கும் பாரத தேசத்தின் **75வது சுதந்திர தின வாழ்த்து**க்களை உள்ளன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். தேசத்தின் சுதந்திரத்திற்காக போராடிய மாவீரர்களை இந்த நாளில் நினைவுகூர்கிறேன். நான் ஒரு 'பாரத பிரஜை' என்று கர்வத்துடன் கூற, சுதந்தரக் காற்று வீசுவதற்கு அரும்பாடுபட்ட அப்புனித ஆத்மாக்களை வணங்குகிறேன்.

**01.08.2021** – குழந்தைகள், பள்ளி & கல்லூரி மாணவர்கள் மற்றும் ஓவியத்தில் ஆர்வமுள்ளவர்களுக்காக ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பில் மாபெரும் ஓவியப் பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது. ஜூம் காணொலி காட்சி வழியாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு 400க்கும் மேற்பட்டோர் முன்பதிவு செய்திருந்தனர். விக்னேஷ் கிராஃபிக்ஸ் உரிமையாளர் திரு. **T.R. மோகன்ராம்** அவர்கள் பயிற்சியை அளித்தார். இந்நிகழ்ச்சிக்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் தலைமை தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. **T.R. சரவணன்** அவர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட அனைவருக்கும் மிகவும் பயனுள்ள நிகழ்ச்சியாக அமைந்தது.

**15.08.2021** – பாரத தேசத்தின் 75ம் ஆண்டு சுதந்திர தின விழா நமது சேம்பர் வளாகத்தில் கொண்டாடப்பட்டது. சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் தேசிய கொடியை ஏற்றினார். சமூக ஆர்வலர், பசுமை இயக்கத்தின் தலைவர் திரு. **K.N.K. ரவீந்திரன்** அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சுதந்திர தின சிறப்புரையை வழங்கினார்.

ஒவ்வொரு செப்டம்பர் மாதம் நடத்தப்படும் ஆண்டு பொதுக்குழு கூட்டம், கொரோனா கட்டுப்பாடுகளை கருத்தில் கொண்டு அரசு உத்தரவின் அடிப்படையில் பின்னர் அறிவிக்கப்படும்.

– K.K. தினேஷ்

SOURASHTRA CHAMBER OF COMMERCE
MADURAI

## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

அங்கத்தினர்களுக்கு வணக்கம்

நமது பாரத தேசம் இது வரை இல்லாத அளவிற்கு ஒலிம்பிக்-ல் பதக்கங்களை பெற்றுள்ளது. சமீபத்தில் டோக்யோ-வில் நடைபெற்ற 2020ம் ஆண்டிற்கான ஒலிம்பிக் போட்டியில் நமது பாரத நாடு 7 பதக்கங்களை வென்றுள்ளது. நாட்டு மக்கள் அனைவருக்கும் இது மகிழ்ச்சியான தருணம். இப்போட்டியில் கலந்து கொண்ட மற்றும் முன்னாள் விளையாட்டு வீரர்கள் பலர் பாரதப்பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் விளையாட்டுத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்தும், சிறப்பாக விளையாடுவோரை தனிப்பட்ட முறையில் ஊக்கமளித்ததன் விளைவாகத்தான் இன்று ஒலிம்பிக் போட்டியில் இத்தனை பதக்கங்களைப் பெற முடிந்தது என்று சமூக வலைத்தளம் மற்றும் நாளிதழ்களின் வாயிலாக தெரிவிக்கின்றனர். வெற்றியாளர்களுக்கு சேம்பர் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதோடு, அவர்களை ஊக்கப்படுத்தி இந்தியாவை உலக அரங்கில் பேச வைத்த நமது பாரதப்பிரதமருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

***



நமது ஸௌராஷ்ட்ர சமூக எழுத்தாளரும், ஸ்ரீ நாயகி குரு பாததூளி கே.ஆர். கிருஷ்ணமாச்சாரி அவர்கள் கடந்த 21.07.2021 அன்று காலமானார் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். இவர் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் நலம் விரும்பி ஆவார். சிட்கான் மாநாட்டின் மலர் வெளியீடு மற்றும் லாப் ஸமாச்சார் இதழுக்கு பல கட்டுரைகளையும், தகவல்களையும் வழங்கி உதவியவர். அவரது மறைவு சேம்பருக்கு பெரும் இழப்பு. அவரை இழந்து வாடும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம். அவரின் புனித ஆன்மா எல்லாம்வல்ல பெருமாளின் திருவடியை சேர இறைவனை வேண்டுகிறேன்.

- B.S. ஜெனார்த்தனன்




முகக்கவசத்தை முறையாக அணியுங்கள்

https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk




# INDUS FINANCE LTD

BVK GROUP

A RBI Registered BSE listed NBFC


Head Office - Kothari Buildings, 4th Floor, No. 114 M G Road, Nungambakkam, Chennai - 600 034. T : 044 - 28331310
E : contact@indusfinance.in W : www.indusfinance.in

Contact us for
All Your Financial needs*

**Property Loans**
**MSME Loans**
**Education Loans**
**Business Loans**
**Vehicle Loans**
**Life Insurance Policy Loans**
**Rental Discounting**

For More Details contact
**Mr.Kannappan V**
M : 94440 51147

* Conditions apply







## ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நடத்திய

# மாபெரும் ஓவியப் பயிற்சிப் போட்டி

## இரண்டு மணி நேரத்தில் பென்சில் ஓவியம்

வரைவது எப்படி என்பதை கற்றுக்கொள்ளும் மாபெரும் நிகழ்ச்சி





நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் சார்பாக கடந்த 01.08.2021 அன்று ஜூம் காணொலி வழியாக மாபெரும் **பென்சில் ஓவியப் பயிற்சி** நிகழ்ச்சி குழந்தைகள் மற்றும் மாணவர்கள், ஓவியப் பயிற்சியில் ஆர்வம் உள்ளவர்கள் ஆகியோருக்காக இந்த சிறப்பு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க 400க்கும் மேற்பட்டவர்கள் முன்பதிவு செய்திருந்தனர். இந்த நிகழ்ச்சியின் ஓவியப்பயிற்சியாளராக விக்னேஷ் கிராஃபிக்ஸ் உரிமையாளர் திரு. **T.R. மோகன்ராம்** அவர்கள் கலந்து கொண்டார்.

சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். சேம்பர் நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. **T.R. சரவணன்** அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார். MJF Lion CA. **R. மணிகண்டன்** District Governor அவர்கள் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். திரு. **B.R.J. கண்ணன்** M.D.D.M., Cardio, Senior Consultant & Interventional Cardiologist, Vadamalayan Hospital, Madurai அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் மற்றும் திரு. **J. வீரநாதன்** Sri Balaji Institute of Computer Technology அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

பயிற்சியாளர் திரு. **T.R. மோகன்ராம்** அவர்கள், பென்சில் ஓவியம் வரைவது எப்படி என்பதைப்பற்றி வரைந்து கொண்டே பல்வேறு நுணுக்கமான தகவல்களை வழங்கினார். வரைவதற்கு ஆர்வம் உள்ளவர்கள் எந்த பென்சிலை, பேப்பர் & போர்டு ஆகியவை எவ்வாறு தேர்வு செய்ய வேண்டும், ஒரு ஓவியத்தை எடுத்துக்கொண்டால் முதலில் எங்கிருந்து துவக்க வேண்டும் போன்ற பல்வேறு சுவையான தகவல்களை வழங்கினார்.

ஓவியம் வரைய நினைப்பவர்கள், தனிப்பட்ட ஒருவரின் உருவத்தை வரைந்தால் அது அவர்களை ஈர்க்கச் செய்யும், மனமுவந்து பாராட்டோ, பரிசையோ பெறலாம். அதுவே, கடவுள் உருவத்தை வரைந்தால், கும்பிட்டு செல்வார்கள். ஓவித்தை ரசிப்பது இரண்டாம் பட்சமாகத் தான் இருக்கும். ஆகவே, தனி நபர்களின் உருவத்தை வரையப்பழகிக்கொள்ளுங்கள் என்ற தமது அனுபவத்தை பகிர்ந்து கொண்டு நிறைவு செய்தார். இந்நிகழ்ச்சி அனைவருக்கும் பயனுள்ளதாக அமைந்தது.

இறுதியாக, சேம்பர் பொதுச்செயலாளர் திரு. **K.K. தினேஷ்** அவர்கள் நன்றி நவில நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.



://m.facebook.com/story.php?story_fbid=3998303700281701&id=705175606261210&sfnsn=wiwspm

PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care




PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragrace Pvt. Ltd



K K Dinakaran

www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831







நமது ஸௌராஷ்டிர சேம்பர் ஆப் காமர்ஸ் வாளகத்தில், கடந்த 15.08.2021 அன்று பாரத தேசத்தின் 75வது சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. சரியாக காலை 8.30 மணி அளவில் தேசியக்கொடியை சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் ஏற்றினார். விழாவில் சிறப்பு விருந்தினராக ஜெய்கங்கா அப்பேரல்ஸ் உரிமையாளரும், பசுமை இயக்கம், மதுரை பந்தடி மகால் மக்கள் நல வாழ்வு சங்கம் ஆகிய அமைப்பின் தலைவருமான திரு. **K.N.K. ரவீந்திரன்** அவர்கள் கலந்து கொண்டு பேசினார்.

## மரங்களை வளர்க்க வேண்டுகோள்

சுதந்திர தின விழாவில் – சிறப்பு விருந்தினரின் உரை

சேம்பரில் நடைபெற்ற சுதந்திர தின விழா நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இயற்கை ஆர்வலர் திரு. **K.N.K. ரவீந்திரன்** அவர்கள் பேசுகையில், கர்நாடக மாநிலம் குடுர் கிராமத்தில் வாழும் 'சால மரதா' **திம்மக்கா** அவர்களின் மரம் நடும் சேவையின் மூலம் ஈர்க்கப்பட்டு தாமும் இந்த முயற்சியில் ஈடுபட்டதாக கூறினார்.

பசுமை இயக்கம் என்ற பெயரில், அமைப்பை உருவாக்கி பல்வேறு பகுதிகளில் மரங்கள் நடப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மரங்கள் நிறைந்த மாமதுரையின் மையப்பகுதியின் பல்வேறு இடங்களில் வளர்ச்சிப்பணிக்காக மரங்கள் காணாமல் போகின்ற இந்த சூழலில், தாம் இருக்கும் பந்தடி 3ல், தெருவோரங்களில் பல்வேறு மரங்களை நட்டதன் பயனாக இன்று மிகவும் இயற்கை அழகுடன் காட்சியளிப்பதாக கூறினார். இது போன்று நகரின் பல்வேறு பகுதிகளில் செய்துள்ளதாக பெருமையுடன் தெரிவித்தார். இன்று தினமும், காக்கை, குருவி, மைனா போன்ற பறவைகள் வந்து செல்வது கிராமத்தில் வாழ்வது போன்று மனதிற்கும் அமைதியாக இருப்பதாக கூறினார். மரங்களை வெட்டுவதை முடிந்த வரையில் தவிர்க்குமாறு அனைவரையும் கேட்டுக்கொண்டு, சுதந்திர போராட்டத்தையும், கார்கில் வீரர்களையும் நினைவுகூர்ந்தார்.

## இரங்கல் செய்தி



**ஜெயலஷ்மி டிரேடர்ஸ்** உரிமையாளரும், நமது சேம்பர் ஆயுட்கால உறுப்பினருமான திரு. **B.K. கிருஷ்ணன்** அவர்கள் 08.08.2021 அன்று அதிகாலை காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரை இழந்து வாடும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். அவரின் ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல எம்பெருமானை வேண்டுகிறோம்.


Life Long Tailor


வாங்கவந்தா பிடிக்கும்க

லைஃப்லாங் டெய்லர்

ரெடிமேட் இல்லங்க உங்கள் அளவில் எங்கள் துணியில்

காட்டன் சர்ட் ரூ. 400/- முதல் காட்டன் பேண்ட் ரூ. 500/-முதல் மற்றும்

திருமணம், திருவிழாக்களுக்கு குரூப் சர்ட் சிறந்த முறையில் தைத்துக் கொடுக்கிறோம்



1-B, பச்சரிசிக்கார தோப்பு, காமராஜர் சாலை, (தினமணி தியேட்டர் எதிர்சந்து), மதுரை-9.

81222 33001 90424 30763


முகக்கவசம் இறுக்கமாக இல்லாமல் சற்றே தளர்வாக இருப்பது நல்லது.




# சிறுதொழில்களிலும் வெற்றிச் சிகரம் தொடலாம்

> வாடிக்கையாளர்கள் அவரவர் கோணத்தில் உருவாக்கிக் கொண்டுள்ள சந்தைப் பார்வையின் மாறுபாடுகளை அறிந்து, அந்த சந்தேகங்களைப் போக்கினால் தான் விற்பனை வேகம் என்பது ஏற்படும்.

ஒரு தொழிலில் ஈடுபடுபவர் உற்பத்தியைத் தொடங்கி அதன் விற்பனையில் லாபம் பார்ப்பது தானே அந்த தொழில் நோக்கத்தின், தொழில்முனைவின் வெற்றியாக இருக்க முடியும்!. அதில் மிகவும் திட்டமிட்டுச் செயல்படுவது என்பதே முக்கியமான அம்சம்.

ஒரு தொழிலை நடத்த, கடன் பெற்றது முதல், பொருள் தயாரிப்பு செய்த வரையில் எதிலும் மூன்றாம் நபரின் தலையீடோ அல்லது போட்டியோ இருந்திருக்க வாய்ப்பில்லை!. ஆனால் இதன் பிறகான நிலை வேறு.

உற்பத்தியை விற்பது என்பது போட்டிகள் நிறைந்த சந்தைக்களம். இங்கே உங்களின் பொருளை தனித்துவம் மிக்கது என நீங்கள் உயர்த்திக் காட்ட வேண்டும். தரமானது என்று நுகர்வோரை உணரச் செய்ய வேண்டும். பூக்கடைக்கு விளம்பரம் தேவையில்லை என்பது பழைய மொழி, ஒவ்வொரு பூக்கடைக்கும் கூட புதுமையான விளம்பரம் வேண்டும் என்பதுதான் இன்றைய வணிக மொழி.

பொருளின் விற்பனையானது உரிய நேரத்தில் சரியான நபருக்கு தேவையான விதத்தில் கிடைக்கும் போதுதான் அது வெற்றிபெறும். ஒரு பொருளைத் தயாரிக்கிறோம். உடனே விற்கும் வாய்ப்பு அமைகிறது மிகழ்ச்சி. ஆனால் எல்லாப் பொருட்களையும் இப்படி விற்று விட முடியாது. பொருட்களின் தன்மைகளுக்கு ஏற்ப அதை வைத்திருந்து விற்க வேண்டும். இடை விடாத வணிக அணுகுமுறைதான் எந்த வாடிக்கையாளரையும் பொருளை நோக்கித் திரும்ப வைக்கும்.

உற்பத்தித் தரத்தின் ஈர்ப்பே ஒரு பொருளுக்கான வாடிக்கையாளர் சந்தை. அதை நிரந்தரமாக அமைத்துக் கொள்வது என்பது, உற்பத்தியாளர் அதை வாடிக்கையாளரிடம் கொண்டு சேர்ப்பது என்பதில்தான் உள்ளது. இதைப் புரிந்து கொள்ளும் உற்பத்தியாளர்கள் தங்கள் பொருளின் விற்பனையை அதிகரித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

குறிப்பாக உற்பத்தியாளர்களின் சந்தை வாடிக்கையாளர்களின் சந்தையாக மாறிவிட்ட காலம் இது. சந்தைத் தேவையைப் பொருத்தே பொருட்களின் உற்பத்தி அளவு தீர்மானிக்கப்படுகிறது. அதனால் பொருட்களின் விற்பனையில் போட்டிகளும் கூட பல நிலைகள் இன்று கடைப்பிடிக்கப்படுகின்றன.

கடன் விற்பனை கூட செய்து வாடிக்கையாளரை நாம் பிடித்து வைத்துக்கொள்ள நேரும். எதிர்பாராத சூழலில் உருவாகும் புதிய நிறுவனத் தயாரிப்புகளால் போட்டிகளையும் திடீரென சந்திக்க வேண்டிவரும். அந்த நிலை இன்றைய வளர்ச்சியில் உள்ளூர் அல்லது உலக நாடுகளின் தயாரிப்பாகவும் இருக்கலாம். குறிப்பாக சந்தைப் போட்டியில் உடனுக்குடன் மாறுபடும் சூழல்களைச் சந்திக்கவும் நாம் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்.

நம்பிக்கை என்பது தொழிலுக்கு மிக முக்கியமானது தான். ஆனால் அதற்காக நம் பொருளின் விற்பனைக்கு, புதிய வாடிக்கையாளரைத் தேடிக் கொண்டே இருக்க வேண்டும். நாம் நம்பியுள்ள வாடிக்கையாளரை தக்க வைத்துக் கொண்டிருப்பதும், புதிய வாடிக்கையாளரை வசப்படுத்திக் கொண்டே இருப்பதுமே பொருளின் விற்பனையை வளர்க்கும் வணிகமுறை.

ஆர்வத்துடன் கடனுக்கு பொருளை வாங்கிக் கொள்ளும் விற்பனையாளர்கள் பலர் அதை திருப்பித் தரும் நோக்குடன் இருப்பதில்லை. அதை வசூலிக்க ஒரு பெரும் போராட்டமே நடத்த வேண்டி வரலாம். கடன் கொடுப்பதில் நன்கு விசாரித்த பின்னே ஈடுபடுவது பாதுகாப்பானது.

விற்பனை சார்ந்த வழிமுறைகள் பலவாகும். அதில் வாடிக்கையாளர்களுடனான தொடர்பு என்பது மாறுபாடுகள் பல அணுகுமுறைகளைக் கொண்டது. தாமே தேடி வந்து பொருட்களை விரும்பி வாங்கிச் செல்லுபவர்கள், வாங்க விருப்பம் இல்லாமல் ஏதோ நோக்குடன் பார்ப்பவர், நம் பொருளை தெரிந்து கொள்ள விரும்புபவர், போட்டியாளர்களின் பொருளே உயர்வென்ற நம்பிக்கையைக் கொண்டிருப்பவர், பொருட்களின்



வடிவை விரும்பினாலும் அதன் தரத்தின் மீதான ஐயப்பாட்டை கொண்டவர் – இப்படியான பல தரப்பட்ட மனம் கொண்ட வாடிக்கையாளர்கள் உண்டு.

இவர்களை எல்லாம் அவரவரின் உளம் கொண்ட எண்ணத்திற்கேற்ப அணுகி, நம் பொருளை வாங்குவதற்கான சூழலுக்கு அவரை அழைப்பது முக்கியம். இதை நாம் ஒருவரே செய்ய முடியாது.

இந்த நிலையில்தான் மார்க்கெட்டிங் எக்சிகியூட்டிவ் என்கிற விற்பனைச் செயற்பாட்டாளர்களின் பன்முனை அணுகுமுறை அவசியமாகிறது.

ஒரு தொழிலின் வளர்ச்சி என்பது அதன் உற்பத்தி சார்ந்த மேம்பாட்டையே மையம் கொண்டுள்ளது. எனவே வாடிக்கையாளர்கள் அவரவர் கோணத்தில் உருவாக்கிக் கொண்டுள்ள சந்தைப் பார்வையின் மாறுபாடுகளை அறிந்து, அந்த சந்தேகங்களைப் போக்கினால் தான் விற்பனை வேகம் என்பது ஏற்படும்.

உற்பத்தியாளர்கள், வாடிக்கையாளர்களின் வருங்கால தேவைகளை ஆராய்ந்து அவர்களின் வாழ்க்கை முறையினை மேம்படுத்தும் வகையிலோ, பல்வேறு குணாதிசயங்கள் கொண்ட பொருளாக தயாரித்து அதனை பயன்படுத்துவதற்கு அவர்களை தயார்படுத்த வேண்டும்.

உதாரணம், ஆப்பிள் படைப்புகள் தனக்கென ஒரு மார்க்கெட்டை உருவாக்கிக் கொண்டவர்கள். குறிப்பிட்ட இடைவெளியில் தங்களுடைய தயாரிப்புகளை மேம்படுத்தி பயன்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். தங்களிடம் பணியாற்றும் ஊழியர்களின் பங்களிப்பவருடன் பொருள்களை தயாரிக்க வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் "ESG" என்னும் ஓர் கட்டத்திற்கு தயாரிப்பு நிறுவனங்களும், முதலீட்டாளர்களும் கவனம் செலுத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதனையும் நாம் கவனம் செலுத்தி, நிறுவனத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

"E - Environmental, S - Social, G - Governance" இது போன்ற செயல்பாடுகள் எல்லாம் பெரிய நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று எண்ண வேண்டாம். ஆரம்ப நிலையிலேயே இதனை கடை பிடித்தால் சிறு நிறுவனங்கள் ஓர் காலகட்டத்தில் பெரிய நிறவனமாக மாறுவதற்கும், சந்தையில் தமக்கென ஓர் மதிப்பை உருாவக்கிக் கொள்வதற்கும் வழிவகுக்கும்.

– தொடரும்...

– தொழில் நேசன், உதவி: எஸ்.எஸ். ராம்சுந்தர்



**தற்சார்பு இந்தியா** என்றால் நமது கதவுகளை உலகத்தை நோக்கி மூடுவது அல்ல... அதிக நம்பிக்கை மற்றும் போட்டித்திறனுடன் நாம் செயல்படுவதற்கான அதிகாரத்தை அளிப்பதே அதன் நோக்கம். **"நாளைக்கான வலுவான இந்தியாவை கட்டமைத்தல்"** எனும் லட்சியத்தில் இந்திய அரசு உறுதியாக உள்ளது.

**திரு. பியூஷ் கோயல்**
மத்திய அமைச்சர்,
வர்த்தக மற்றும் தொழில் துறை

## நாளிதழ்களில்

**பாரம்பரிய மருத்துவம் காக்கப்படும்**

**குமரன் பி.ஜகுவா, தலைவர், சவுராஷ்டிரா தொழில் வர்த்தக சங்கம்:** தூத்துக்குடியில் டைடல் பூங்கா அமைப்பதால் தென் மாவட்ட பட்டதாரிகள் பயன் பெறுவர். சித்த மருத்துவ பல்கலை குறித்த அறிவிப்பு சித்த மருத்துவ துறையினருக்கு ஊக்கமளிக்கும்.



பாரம்பரிய மருத்துவம் காக்கப்படும். பெட்ரோல் மீதான வரியில் ரூ.3 குறைப்பதால் சமான்ய மக்களை மகிழ்ச்சி அடைய செய்யும்.

ஜல் ஜீவன் திட்டத்தில் குடிநீர் இணைப்பு, தொகுதிகளில் ரூ.3 கோடி மதிப்பில் விளையாட்டு அரங்கம் போன்ற அறிவிப்புகளை வரவேற்கிறோம்.

தொழில் முனைவோர், தொழில் துறை குறித்த அறிவிப்பு இல்லாதது ஒன்று தான் குறை.

சௌராஷ்டிரா தொழில் வர்த்தக சபை தலைவர் குமரன் பி.ஜகுவா: பாரம்பரிய மருத்துவத்தைக் காக்கும் வகையில் சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் அமைப்பது வரவேற்புக்குரியது. தூத்துக்குடி



யில் தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைப்பதன் மூலம், தென்மாவட்டங்களைச் சேர்ந்த பட்டதாரிகள் மிகவும் பயன்பெறுவர். அதேநேரம், தொழில் முனைவோர் மற்றும் தொழில் துறை வளர்ச்சிக்கு போதுமான அறிவிப்புகள் இல்லாதது சற்று வருத்தம் அளிக்கிறது.


UIN No. Applied MFG. No. 8/25 D

**பிளாஸ்மோடின் கேப்ஸ்ல்ஸ் 500 mg.**
**எதிர்ப்பு சக்தி அதிகரிக்க**
**PLASMODIN CAPSULES 500 mg.**
**Increase Immunity Power**



Prop. : B.K.D. Suresh

4/150, Virathanur Road, Ayyanarpuram, Paniyur Post, Madurai - 9. Mobile : 93607 96538


ஒரே மாஸ்க்கை மீண்டும் பயன்படுத்தக் கூடாது

https://www.youtube.com/watch?v=5pWfZeFCCXc&feature=youtu.be



# டிஜிட்டல் கட்டண முறை இ-ருபி

நமது பாரதப்பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் இந்த ஆண்டு ஆகஸ்ட் 2-ம் தேதி அன்று ரொக்கமில்லா, நேரடி தொடர்பில்லா டிஜிட்டல் பரிவர்த்தனைக்கான, டிஜிட்டல் பரிவர்த்தனைத் தீர்வான இ-ருபி-யைத் தொடங்கி வைத்தார். மக்களின் வாழ்க்கையுடன் தொழில்நுட்பத்தை இணைத்து எவ்வாறு இந்தியா முன்னேறி வருகிறது என்பதன் அடையாளம் இ-ருபி என்று அவர் கூறினார்.

**இ-ருபி என்றால் என்ன? அது எவ்வாறு செயல்படுகிறது?:** அடிப்படையில் இது ஒரு முன்கூட்டியே பணம் செலுத்திய டிஜிட்டல் வவுச்சர் ஆகும். இதனை பயனாளி அவரது தொலைபேசியில் குறுந்தகவல் வடிவிலோ அல்லது கியூஆர் கோட் வடிவிலோ பெறுவார். அதனை ஏற்றுக்கொள்ளும் எந்த மையத்திலும் அதைக்காட்டி பயனாளி பணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

உதாரணமாக, ஒரு ஊழியருக்கு குறிப்பிட்ட மருத்துவமனையில் குறிப்பிட்ட சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்று அரசு விரும்பினால், அது இ-ருபி வவுச்சரை ஒரு குறிப்பிட்ட தொகையை பங்குதார வங்கி மூலமாக வழங்கலாம். ஊழியருக்கு ஒரு குறுந்தகவலோ அல்லது அவரது போனில் கியூஆர் கோடோ அனுப்பப்படும். அந்த ஊழியர் குறிப்பிட்ட மருத்துவமனைக்கு சென்று போனில் பெறப்பட்ட இ-ருபி வவுச்சர் மூலமாக பணம் செலுத்தி சேவையைப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு இ-ருபி ஒரே தடவையிலான, நேரடி தொடர்பில்லாத, ரொக்கமில்லா வவுச்சர் அடிப்படையிலான பரிவர்த்தனை முறையாகத் திகழ்கிறது.

இது எந்தவித அட்டை, டிஜிட்டல் பரிவர்த்தனை செயலி அல்லது இணையதள வங்கி அணுக்கம் ஆகியவற்றின் உதவியுமின்றி பயனாளிகள் பணம் பெறுவதற்கு உதவுகிறது. ரிசர்வ் வங்கி சிந்தித்து வருகிற டிஜிட்டல் கரன்சி முறையாக இ-ருபி-யை எண்ணி குழப்பமடையக்கூடாது. இ-ருபி என்பது ஒரு நபரை அடிப்படையாகக் கொண்டது. அதோடு, குறிப்பிட்ட டிஜிட்டல் வவுச்சர் நோக்கமுடையது.

**நுகர்வோருக்கு இ-ருபி எவ்வாறு பயனளிக்கிறது?:** மற்ற டிஜிட்டல் பரிவர்த்தனைகளுடன் ஒப்பிடுகையில், இ-ருபியைப் பொறுத்தவரை பயனாளிக்கு வங்கிக் கணக்கு இருக்க வேண்டிய அவசியமில்லை என்பது மிகப்பெரிய சிறப்பு அம்சம். இது எளிமையான, நேரடி தொடர்பில்லாத பணம் பெறுவதை உறுதி செய்கிறது. இதற்கு தனிநபர் விவரங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. இதில் மற்றொரு பயன் சாதாரண போன்கள் மூலம் கூட இ-ருபி முறையைப் பயன்படுத்தலாம். அதனால், ஸ்மார்ட் போன் இல்லாதவர்களும், இணையதள வசதி இல்லாத இடங்களில் உள்ளவர்களும் கூட இதனைப் பயன்படுத்தலாம்.

**கொடுப்பவர்களுக்கு இ-ருபியின் பயன்கள் எவை?:** இ-ருபி நேரடி பணப்பரிவர்த்தனை முறையை வலுப்படுத்துவதிலும், அதில் மேலும் வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்தும் வகையிலும் பெரும் பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில், வவுச்சர்களை நேரடியாக அளிக்க வேண்டிய அவசியமில்லை என்பதுடன், செலவைக் குறைக்கவும் இது வழிவகுக்கும்.

**சேவை வழங்குவோருக்கு கிடைக்கும் பயன்கள் என்ன?:** முன்கூட்டியே பணம் செலுத்தும் வவுச்சராக இருப்பதால், இ-ருபி சேவை வழங்குவோருக்கு உடனடியாக தொகை கிடைப்பதை உறுதி செய்கிறது.

**இ-ருபியை உருவாக்கியது யார்?:** இந்தியாவில் டிஜிட்டல் பரிவர்த்தனை முறைகளை மேற்பார்வையிடும் இந்திய தேசிய பரிவர்த்தனை கழகம் (என்பிசிஐ), ரொக்கமில்லா பரிவர்த்தனைகளை ஊக்குவிக்க வவுச்சர் அடிப்படையிலான இ-ருபி பரிவர்த்தனை முறையை உருவாக்கியுள்ளது. நிதித்துறை சேவைகள் துறை, சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம், தேசிய சுகாதார ஆணைய் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இது உருவாக்கப்பட்டுள்ளது.

**இ-ருபியை எந்த வங்கிகள் அளிக்கின்றன?:** இ-ருபி பரிவர்த்தனைகளுக்காக என்பிசிஐ 11 வங்கிகளுடன் கூட்டு வைத்துள்ளது. அவை ஆக்சிஸ் வங்கி, பேங்க் ஆப் பரோடா, கனரா வங்கி, எச்.டி.எப்.சி. வங்கி, ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி, இந்தியன் வங்கி, இண்டஸ்இண்ட் வங்கி, கோடக் மகேந்திரா வங்கி, பஞ்சாப் நேசனல் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, யூனியன் பேங்க் ஆப் இந்தியா ஆகிய வங்கிகள் ஆகும். பாரத் பே, பீம், பரோடா மெர்ச்சன்ட் பே, பைன் லேப்ஸ், பிஎன்பி மெர்ச்சன்ட் பே, யோனோ எஸ்பிஐ மெர்ச்சன்ட் பே ஆகியவை இதற்கான செயலிகள் ஆகும். மேலும் அதிக வங்கிகள் மற்றும் செயலிகள் சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தற்போது இ-ருபியை எங்கு பயன்படுத்தலாம்?:** தொடக்கமாக என்பிசிஐ 1600-க்கும் மேற்பட்ட மருத்துவமனைகளை தொடர்பில் வைத்துள்ளது. இங்கு இ-ருபி முறையைப் பயன்படுத்தலாம். வரும் நாட்களில், தனியார் துறை ஊழியர்களுக்கு பயன்களை வழங்குவதற்கும், எம்எஸ்எம்இ நிறுவனங்கள் தொழில் பரிவர்த்தனைகளுக்கு பின்பற்றவும் ஏதுவாக இ-ருபி பயன்படுத்தப்படும், தளம் விரிவாக்கப்படும் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

- PIB Press Release Dtd. 06.08.2021

# சௌராஷ்ட்ர விஜயாப்த ஆண்டு பிறந்த கதை

தி இந்து (தமிழ்)
நாளிதழில் வெளியான தகவல்
நாள்: 8.3.2021

சித்திரை மாத முதல் நாள் தமிழகத்தின் புது ஆண்டு பிறப்பு, யுகாதி பண்டிகை நாள் ஆந்திரா மற்றும் கர்நாடகா புது ஆண்டு பிறப்பு, விஷு பண்டிகை முதல் நாள் கேரளாவின் புது ஆண்டு பிறப்பு, இதேபோல் கலாச்சாரம் காப்பதில் முன்னோடியாக விளங்கி வரும் சவுராஷ்டிரர்களுக்கும் புது ஆண்டு பிறப்பு உள்ளது.

சவுராஷ்டிரர்கள், குஜராத்தை சேர்ந்த சவுராஷ்டிர பிரதேசத்தில் வசித்து வந்தனர். கி.பி. 1024ல் அப்பகுதியில் உள்ள சோமநாதபுரம் கோயிலை கொள்ளை அடிக்க கஜினிமுகமது 17 முறை படையெடுத்தார். அளவில்லாத செல்வங்களையும், ஆபரணங்களையும் கொள்ளை அடித்ததோடு, மக்களையும் கொடுமைப்படுத்தியதால் சவுராஷ்டிரர்கள் அங்கிருந்து வெளியேறி மால்வா, தேவகிரி, கும்பினி ஆகிய நாடுகளில் குடியேறினர். இந்த நாடுகள் மீதும் முஸ்லீம் மன்னர்களின் படையெடுப்பு நடந்தது. இதனால் இவர்கள் அங்கிருந்து வெளியேறி விஜயநகர சாம்ராஜ்ஜியத்தில் குடியேறினர்.

அரசர்களுக்கும், பிரபுக்களுக்கும் தேவையான பட்டாடைகளை நெய்து கொடுத்த காரணத்தினால் இவர்களுக்கு விஜயநகரத்தில் தக்க மரியாதையும் சிறப்பும் கிடைத்தது. விஜயநகர மன்னனும் சவுராஷ்டிரர்களை அரசவைக்கு அழைத்து சிறப்பித்தார். மேலும் தனது சாம்ராஜ்ஜிய ஆதிக்கத்தின் கீழ் உள்ள மதுரை, தஞ்சை போன்ற இடங்களில் இவர்கள் வசிக்க ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தார். இப்படி தங்களுக்கு அங்கீகாரம் கிடைத்த கி.பி. 1312 யுகாதி நாளில் சௌராஷ்ட்ரர்கள் தங்களுக்கென சவுராஷ்டிர விஜயாப்தம் என்ற ஒரு சகாப்தத்தை உருவாக்கிக் கொண்டனர்.

அன்று முதல் தங்களுடைய மங்கள காரியங்களில் அதாவது திருமண நிச்சய ஓலை, திருமணம், காது குத்தல், கிரஹப்பிரவேசம் போன்ற பத்திரிக்கைகளில் சவுராஷ்ட்ரா விஜயாப்தம் ஆண்டை குறிப்பது வழக்கமாக்கிக் கொண்டனர். இதேபோல் தங்கள் கோயில்களின் திருவிழா பத்திரிக்கைகளிலும் சவுராஷ்டிரா விஜயாப்தம் ஆண்டை குறிப்பதை இன்றளவும் நடைமுறையில் கொண்டுள்ளனர்.

இப்போது 709 சவுராஷ்ட்ரா விஜயாப்த ஆண்டு நடக்கிறது. பிரதி ஆண்டு யுகாதி பண்டிகை தினமே சவுராஷ்ட்ரர்களின் விஜயாப்த ஆண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

## டோக்கியோ ஒலிம்பிக் 2020-ல் வெற்றி பெற்ற இந்திய வீரர்கள்




| GAME | TYPE | NAME | MEDAL |
|---|---|---|---|
| Javelin throw | Men's | Niraj Chopra | Gold |
| Weightlifting | Women's 49kg | Chanu Saikhom Mirabai | Silver |
| Wrestling | Men's freestyle 57kg | Ravi Kumar Dahiya | Silver |
| Wrestling | Men's freestyle 65kg | Bajrang Punia | Bronze |
| Badminton | Women's singles | PV Sindhu | Bronze |
| Boxing | Women's welterweight | Lovlina Borgohain | Bronze |
| Hockey | Men's tournament | H.Singh, N.Sharma and more... | Bronze |


சிறந்த தையல் !
குறைந்த விலையில் !
நீடித்த உழைப்பு தரும் !!
ஒரே விலையில் !!
ரேவதிஸ் டெக்ஸ்
பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்
1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223

உடலுக்கும் மனதுக்கும் புத்துணர்வை அளிக்கும்

# ஸ்டீரியோகிராம்

சார்லஸ் வீட்ஸ்டோன் என்பவர் 1838ம் ஆண்டு ஸ்டீரியோகிராம் படங்களைக் கண்டறிந்தார். ஸ்டீரியோகிராம் என்பது படத்தினுள் மறைந்துள்ள காட்சியின் மாயத் தோற்றத்தை நம்முள் இருக்கும் அற்புதப் பார்வைக்கு காட்சி அளிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஸ்டீரியோகிராம்களில் உள்ள முப்பரிமான (3D) வடிவங்களை உணர, ஒருவர் ஸ்டீரியோகிராம் படத்தில் தங்களுடைய கவனத்தை ஒரு முகமாக செலுத்தி இரு கண்களையும் ஒரே கோணத்தில் நிலைநிறுத்தி அமைதியாகவும், கவனமாகவும் பார்க்கும் போது படத்தினுள் மறைந்துள்ள மாயக் காட்சியை, முப்பரிமாணக் காட்சியாக நம்முள் இருக்கும் அற்புதப் பார்வைக்கு தோன்றும். இது தொலைநோக்கு இடமாறு (Binocular Parallax) என அழைக்கப்படுகிறது.

ஒரு சிறிய படத்தை பக்கம் முழுவதும் அமைத்து அதில் ஏதாவது ஒரு உருவத்தை அமைப்பதை தான் இதுவரை செய்யப்பட்டுள்ளது. தற்போது முதன்முறையாக எழுத்துக்களை வைத்து வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ், ஆங்கிலம், ஹிந்தி ஆகிய எழுத்துக்களைக் கொண்டது. அந்தந்த எழுத்துக்களைத் தொடக்க எழுத்தாக கொண்டு வரும் வார்த்தைகளின் படங்களைக் கொண்டு அந்தந்த எழுத்துக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. எழுத்தைக் காண்பதோடு வார்த்தைகளின் படங்களைக் காணும் போது மனதில் அந்த எழுத்தும் வார்த்தையும் பதிந்திவிடும். இது கண்களுக்கான சிறந்த பயிற்சி....

**ஸ்டீரியோகிராம் படங்களைப் பார்ப்பதால் ஏற்படும் நன்மைகள்:**

1. பார்வையின் திறனை மேம்படுத்த...
2. காட்சித் திறன்களை வளர்த்துக் கொள்ள...
3. மூளையின் செயல்திறனை அதிகரிக்க...
4. மன அழுத்தத்தைக் குறைத்து மனதை அமைதிப்படுத்த...
5. மொபைல் மற்றும் கணினியால் ஏற்படும் கண் அழுத்தத்தை நீக்க...
6. கற்றல், வாசிப்பு மற்றும் விளையாட்டு போன்ற செயல்பாடுகளைத் துரிதப்படுத்த...

இங்கு (பக்கம் 15-ல்) கொடுக்கப்பட்டுள்ள ஸ்டீரியோகிராம் படத்தில் என்னென்ன எழுதுகள் உள்ளன எனக் கண்டறிந்து அனுப்புபவர்களுக்கு ரூ. 100/- மதிப்புள்ள தமிழ் உயிர் எழுத்துகள் கொண்ட புத்தகம் 25 நபர்களுக்கு வழங்க உள்ளோம். மேலும் ஸ்டீரியோகிராம் புத்தகத்தை பரிசாக கொடுக்க நினைப்பவர்கள் பரிசு கொடுப்பவர் பெறுவரின் புகைப்படத்துடன் பெயரையும் பதிப்பித்துக்கொள்ளலாம்.

**சரியான பதிலை 97905 75650 என்ற எண்ணிற்கு ஆகஸ்ட் 31க்குள் அனுப்பி வைக்கவும்.**




**ஸ்டீரியோகிராம் - மதிக்கும் படங்கள்**

5 வரிசை கொண்ட படங்கள் பார்ப்பதற்கு வரிசையாக உள்ளது போல தோன்றும். அதனைக் கவனித்துப்பார்த்தால் ஒவ்வொரு வரிசை படங்களும் படிக்கட்டுகளில் அழகாக அடுக்கி வைத்தது போல் நமது அற்புதப் பார்வைக்குத் தோன்றும்.


பதிவு எண்: 16 / 2002
18 ஆண்டு சேவை
Ph : 0452 - 2679676, 4219676
மகாத்மா முதியோர் இல்லம்
Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்
7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.
exempt u/s 80G vide C.I.T. Madurai order in C.No.464/29/04-05/CIT-I
FCRA No. 075940608
PAN No. : AABTM1941R
A/c Name : MAHATMA'S TRUST
A/c No. : 1717115000001527
IFSC CODE : KVBL0001717 MICR CODE : 625053023
KARUR VYSYA BANK, Kamarajar Salai Br. MADURAI

E-mail : mahatma.trust@yahoo.in website : www.mahatmaoldagehome.org
ஒருநாள் நீங்களும் உதவலாமே
தங்களின் பிறந்த நாள், திருமண விழா, திருமண நாள்
பெயர் சூட்டு விழா, சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேக விழா
தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும், ரம்ஜான்
உங்கள் இல்லத்தில் நடக்கும் அனைத்து விசேஷ சுபகாரிய காலங்களிலும் எங்கள் முதியோர் இல்லத்திற்கு "நன்கொடையாகவோ (அ) உணவாகவோ" வழங்குமாறு வேண்டுகிறோம்.
"தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரி விலக்கு 80-G உள்ளது."
18 ஆண்டு சேவை
தொடர்புக்கு : மகாத்மா முதியோர் இல்லம்
செல் : 9786140570, 94437 23337

Image: 01







Image: 02

Image: 03






Image: 04

# Startup India Seed Fund Scheme

Easy availability of capital is essential for entrepreneurs at the early stages of growth of an enterprise.

Funding from angel investors and venture capital firms becomes available to startups only after the proof of concept has been provided. Similarly, banks provide loans only to asset-backed applicants. It is essential to provide seed funding to startups with an innovative idea to conduct proof of concept trials.

DPIIT has created Startup India Seed Fund Scheme (SISFS) with an outlay of INR 945 Crore to provide financial assistance to startups for Proof of Concept, prototype development, product trials, market entry, and commercialization.It will support an estimated 3,600 entrepreneurs through 300 incubators in the next 4 years.

The Hon'ble Prime Minister of India announced the scheme in his Grand Plenary address of Prarambh: Startup India International Summit on 16th January 2021. After approval of EFC and Hon'ble Finance Minister, the scheme has been notified on 21.01.2021.

The Seed Fund will be disbursed to eligible startups through eligible incubators across India.

**Objectives of SISFS**

The Indian startup ecosystem suffers from capital inadequacy in the seed and 'Proof of Concept' development stage.

The capital required at this stage often presents a make or break situation for startups with good business ideas.

Many innovative business ideas fail to take off due to the absence of this critical capital required at an early stage for proof of concept, prototype development, product trials, market entry and commercialization.

Seed Fund offered to such promising cases can have a multiplier effect in validation of business ideas of many startups, leading to employment generation.An Experts Advisory Committee

**Experts Advisory Committee:** (EAC) it has been constituted by Department for Promotion of Industry and Internal Trade (DPIIT) , which will be responsible for the overall execution and monitoring of the Startup India Seed Fund Scheme.

The EAC will evaluate and select incubators for allotment of Seed Funds, monitor progress, and take all necessary measures for efficient utilization of funds towards fulfilment of objectives of Startup India Seed Fund Scheme.

**Eligibility Criteria - Startups:**

- A startup, recognized by DPIIT, incorporated not more than 2 years ago at the time of application. To get DPIIT-recognized, please visit https://www.startupindia.gov.in/content/sih/en/startup gov/startup-recognition-page.html
- The startup must have a business idea to develop a product or a service with a market fit, viable commercialization, and scope of scaling.
- The startup should be using technology in its core product or service, or business model, or distribution model, or methodology to solve the problem being targeted.
- Preference would be given to startups creating innovative solutions in sectors such as social impact, waste management, water management, financial inclusion, education, agriculture, food processing, biotechnology, healthcare, energy, mobility, defence, space, railways, oil and gas, textiles, etc.
- Startup should not have received more than Rs 10 lakh of monetary support under any other Central or State Government scheme. This does not include prize money from competitions and grand challenges, subsidized working space, founder monthly allowance, access to labs, or access to prototyping facility.
- Shareholding by Indian promoters in the startup should be at least 51% at the time of application to the incubator for the scheme, as per Companies Act, 2013 and SEBI (ICDR) Regulations, 2018.


**Sowndarya Traders**

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733

*Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary*



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com


கைகளை அடிக்கடி சோப்பு தேய்த்து நன்றாக கழுவ வேண்டும்.
கைகளின் பின்பக்கம், நக இடுக்குகளிலும் கழுவ வேண்டும்.

- A startup applicant can avail seed support in the form of grant and debt/convertible debentures each once as per the guidelines of the scheme.

**Eligibility Criteria - Incubators:**

- The incubator must be a legal entity:
  - A society registered under the Societies Registration Act 1860, or
  - A Trust registered under the Indian Trusts Act 1882, or
  - A Private Limited company registered under the Companies Act 1956 or the Companies Act 2013, or
  - A statutory body created through an Act of the legislature
- The incubator should be operational for at least two years on the date of application to the scheme
- The incubator must have facilities to seat at least 25 individuals
- The incubator must have at least 5 startups undergoing incubation physically on the date of application
- The incubator must have a full-time Chief Executive Officer, experienced in business development and entrepreneurship, supported by a capable team responsible for mentoring startups in testing and validating ideas, as well as in finance, legal, and human resources functions
- The incubator should not be disbursing seed fund to incubatees using funding from any third-party private entity
- The incubator must have been assisted by the Central/State Government(s)
- In case the incubator has not been assisted by the Central or State Government(s):
  - The incubator must be operational for at least three years
  - Must have at least 10 separate startups undergoing incubation in the incubator physically on the date of application
  - Must present audited annual reports for the last 2 years
- Any additional criteria as may be decided by the Experts Advisory Committee (EAC)

## மதுரை மாவட்ட பட்டதாரி இளைஞர்களுக்கு தொழில் துவங்க வாய்ப்பு

மதுரை மாவட்டத்தில் பி.இ., பி.டெக்., பி.பார்ம்., கேட்டரிங் பட்டதாரிகள் தொழில் துவங்க, விரிவுபடுத்த, புதுமையான கண்டுபிடிப்பை செயல்படுத்த தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் மூலம் பிணையமில்லா கடன் வழங்கப்படுகிறது.

சிறு, குறுந்தொழில்களை அதிகரிக்க இக்கடன் வழங்கப்படுகிறது. கேட்டரிங் படித்தவர்கள் துறை சார்ந்த மூன்றாண்டு அனுபவம், டிப்ளமோ முடித்திருந்தால் ஆறாண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

குறைந்தது ரூ. 50 லட்சம் முதல் அதிகபட்சமாக ரூ. 3 கோடி வரை கடன் வழங்கப்படுகிறது.

தொழில் முதலீட்டுக் கழக மண்டல மேலாளர் ஆனந்தன், கிளை மேலாளர் கண்ணன் கூறியதவாது; கடன் தொகையில் 25 சதவீதம் தொழில் துவங்குபவர்கள் முதலீடு செய்ய வேண்டும். அதிகபட்சம் ஏழாண்டுக்குள் கடனை திரும்பி செலுத்த வேண்டும். கடனை அடைக்கும்வரை தமிழக அரசின் 6 சதவீதம் வட்டி சலுகை, தொழில் துவங்கிய முதல் மூன்றாண்டுகளுக்கு மின் கட்டணத்தில் 20 சதவீதம் சலுகை வழங்கப்படும்.

புதிய தொழில்நுட்பங்களுக்கு, அதிகாரிகள் குழுவினர் பரிந்துரையின் பேரில் பிணையமில்லா கடன் வழங்கப்படும் என்றனர்.

மேலும், விவரங்களுக்கு முதலீட்டு கழக திட்ட மேலாளர் ராஜாவை 87780 40572ல் தொடர்பு கொள்ளலாம்.

- தினமலர் (நாள்: 04.08.2021)




Available in :
15kg Tin, 1 Ltr, 1/2 Ltr, 200ml, 100ml, 50ml

சாரதி®
நல்லெண்ணெய்



Manufactured & Packed by : RAJALAKSHMI OIL MILL
2/502, Narasingam Road, Krishna Nagar, Kadachanenthal, Madurai - 625 107. Ph : +91 452 650 5795 Cell : 97894 52896 e-mail : reachus@sarathioil.in
http://www.laabhmart.org/rajalakshmioilmill

| Member No. | COMPANY NAME | NAME OF THE PERSON | CONTACT NO. | D.O.B |
|---|---|---|---|---|

## SCC LIFE MEMBERS BIRTHDAY GREETINGS - SEPTEMBER MONTH

| Member No. | COMPANY NAME | NAME OF THE PERSON | CONTACT NO. | D.O.B |
|---|---|---|---|---|
| SCC/L-M/379 | M/S. PONNI PHARMA | Mr. T.V. MAHADEVAN | 9944565226 | 02.09.1948 |
| SCC/L-M/079 | M/S. Venkadathri Constructions | Mr. K.V.VIJAYA KUMAR | 9843053345 | 02.09.1955 |
| SCC/L-M/367 | M/S. SOWMIYA KNIT CREATION | Mr. K.R. SURESH BABU | 9442631394 | 02.09.1968 |
| SCC/L-M/228 | M/s.Sri Meenakshi Caterers, | Mr.A.M.RAMAKRISHNAN-Proprietor | 9345213345 | 03.09.1955 |
| SCC/L-M/226 | M/s.Veda Medicals, | Mr.L.G.DHUVARAGANATH | 9994523808 | 03.09.1959 |
| SCC/L-M/119 | M/s. VISHNU SHRI TEX | Mr. K.R. SURESH BABU | 9443572367 | 03.09.1963 |
| SCC/L-M/433 | M/S. N.S. KARTHICK BABU | Mr. N.S. KARTHICK BABU | 9344101937 | 03.09.1968 |
| SCC/L-M/256 | M/S. SARAVANA TRADERS | Mr. N.S. SARAVANAN | 9842127629 | 06.09.1968 |
| SCC/L-M/353 | M/s.Sree Meenakshi Dying Company | Mr. P.K.MADHANLAL | 9362965533 | 07.09.1964 |
| SCC/L-M/200 | M/S. P.R. VIDYASAGAR | Mr. P.R. VIDYASAGAR | 9894100932 | 08.09.1948 |
| SCC/L-M/507 | M/S. BAWA TRADING COMPANY | Mr. B.P. SETHU | 9443675628 | 09.09.1970 |
| SCC/L-M/208 | M/S. NIELAM.B.K. RICE MILL | Mr, N.K. PARTHASARATHY | 9486671470 | 11.09.1941 |
| SCC/L-M/442 | M/S. SRI VISHNU CONSTRUCTION | Mr. K.V. SRINIVASAN | 8825867470, 9366117000 | 11.09.1952 |
| SCC/L-M/105 | CHARTED ACCOUNTANT | Mr. P.K. PREMNATH | 9360311961 | 12.09.1955 |
| SCC/L-M/331 | M/S. GEETHA CLINIC | Dr. S.R. SUBRAMANIAN | 8144402671 | 14.09.1941 |
| SCC/L-M/566 | M/s. J K SON | Mr. K.N.K. GANESH KUMAR | 9942329263 | 14.09.1941 |
| SCC/L-M/066 | M/S. Saravanaa Sarees | Mr. O.G. SARAVANAN | 9443151558, 9487481558 | 14.09.1970 |
| SCC/L-M/204 | M/s. K.K. PROMOTERS | Mr. K.K. RAM SUNDAR | 9842380172 | 15.09.1964 |
| SCC/L-M/120 | M/S. ENVIRO TECH CONSTRUCTIONS - | Mr. S.S. SARAVANAN | 9942417649 | 15.09.1975 |
| SCC/L-M/170 | M/S. VIJAYA ENTERPRISES | Mr. K.N. SIVAKUMAR | 9443148028 | 16.09.1968 |
| SCC/L-M/588 | M/S. M.V. PADHMAVATHI &Co., | Mr. M.V. PRAKASH | 9894412505 | 16.09.1972 |
| SCC/L-M/236 | M/S. SRI BALAJI TEXTILES | Mr. K.V. RAJENDRAN | 9043380608 | 18.09.1954 |
| SCC/L-M/078 | M/S. SARANK PUBLICITIES | Mr. T.S.KUPPU BABU | 9843068099 | 18.09.1957 |
| SCC/L-M/203 | M/s. K.K. PROMOTERS | Mr. K.K. SRINIVASAN | 9843024630 | 18.09.1965 |
| SCC/L-M/027 | M/s.Jeyakumar Textiles | Mr. C.S.JAYAKUMAR | 9443033196 | 18.09.1968 |
| SCC/L-M/466 | | Mr. Anna H.S.K. VENUGOPALAN | 9843015837 | 19.09.1943 |
| SCC/L-M/354 | M/S. CHAKRA FLORE MILL | Mr. G.K. EKNATH | 9952200245 | 20.09.1967 |
| SCC/L-M/277 | M/S. THE MAHALAKSHMI MILL | Mr. B.R MAHESH | 9443726775 | 21.09.1954 |
| SCC/L-M/212 | M/S. ATLINE TECHNOLOGIES INDIA PVT. LTD | Mr. T.C. VENKATESAN | 9994454505 | 23.09.1968 |
| SCC/L-M/029 | M/s.Yuvaraajan Textiles | Mr. J.K.THIYAGARAJAN | 7708680970 | 24.09.1949 |
| SCC/L-M/178 | M/S. SARATHI APPARELS | Mr. T.K. GOPINATH | 9843050528 | 24.09.1970 |
| SCC/L-M/317 | M/S. NEW DASU METALS | Mr. T.K. CHANDRASEKARAN | 9942542383 | 25.09.1959 |
| SCC/L-M/381 | M/S. VISHAL TRADER | Mr. B.K. JANAR ADHITHYAN | 9443030237 | 25.09.1972 |
| SCC/L-M/446 | M/S. GOWRI CATERING (Out Door) | Mr. K.G. GOPINATH | 7502454688 | 27.09.1954 |
| SCC/L-M/489 | CHARTERED ACCOUNTANT | Mr. A.P. JAGADISH | 9842196062 | 27.09.1974 |
| SCC/L-M/504 | M/s. SRI MEENAKSHI TEXTILES | Mr. V.V. BALASUBRAMANIAN | 9443795230 | 29.09.1953 |
| SCC/L-M/533 | M/S.Ajantha Printers | Mr. N.K.NEELAKANDAN | 9843653565 | 29.09.1965 |

## SCC ANNUAL MEMBERS BIRTHDAY GREETINGS - SEPTEMBER MONTH

| Member No. | COMPANY NAME | NAME OF THE PERSON | CONTACT NO. | D.O.B |
|---|---|---|---|---|
| SCC/O-M/174 | M/S. ADIKESH PIPE INDIA | Mr. M.R. KUMARESH | 9894783329 | 06.09.1969 |
| SCC/O-M/1127 | | Mr. V.K. KRISHNAMOORTHY | 9940980061 | 03.09.1944 |
| SCC/O-M/1133 | M/S. IMEX BUSINESS SOLUTIONS | Mr. R.K. PREMNATH | 8056656889 | 04.09.1972 |
| SCC/O-M/265 | M/S. SURIYA ENGINEERING WORKS | Mr. P.V. AMAR SING | 9344101252 | 05.09.1966 |
| SCC/O-M/881 | M/S. SHYAMALA STICKER WORK | Mrs. G.J. SHYAMALA | 9894519836 | 06.09.1962 |
| SCC/O-M/925 | | Mr. N.S.SUBRAMANIAN | 9894822437 | 08.09.1954 |
| SCC/O-M/588 | M/S. Savitha Photo Lamination | Mr. T.R. RAMKUMAR | 7402369199 | 09.09.1973 |
| SCC/O-M/976 | M/S. SURESH FASHIONS | Mr. K.R. SURESH | 9842889789 | 10.09.1971 |
| SCC/O-M/1043 | M/S. R.K. TECHNOLOGYS | Mr. M.R.M. RAMPRASATH | 9843326996 | 11.09.1979 |
| SCC/O-M/977 | M/S. AISHWARYAM GRAPHICS | Mr. K.K. SARAVANAN | 9952477984 | 11.09.1980 |
| SCC/O-M/754 | | Mr. P.K. KUMARAN | 9600990229 | 12.09.1950 |
| SCC/O-M/938 | M/S. BONTON HOLIDAYS | Mr. R.B. SARAVANAN | 9943031237 9159918447 | 12.09.1979 |
| SCC/O-M/044 | M/s. Dinakaran Iron Works | Mr.T.R.SUBRAMANIAN | 9842733061 | 14.09.1951 |
| SCC/O-M/1081 | M/S. UNIVERSAL ELECTRONICS | Mr. J.R. GOVINDARAJAN | 9443674734 | 14.09.1973 |
| SCC/O-M/386 | M/S. DEVADOSS DYEING COMPANY | Mr. L.K. DEVADOSS | 9842069328 | 19.09.1965 |
| SCC/O-M/957 | M/S. BIGDBIZ SOLUTIONS | Mr. N.S. SATIS KUMAR | 9884616569 | 19.09.1979 |
| SCC/O-M/953 | M/S. SHREE ANNIKAA AGENCY | Mr. B.S. VIJAYAKUMARAN | 9655955906 | 20.09.1971 |
| SCC/O-M/1126 | | Mr. T.S. SEKAR | 9442510399 | 21.09.1957 |
| SCC/O-M/927 | M/S. RAVI RAJ TEXTILE & AGENCIES | Mr. M.R. RAVINDRAN | 9344123401 | 23.09.1960 |
| SCC/O-M/1087 | M/S. SHANMUGA BAGS | Mr. K.J. SENTHIL KUMAR | 9047041290 | 23.09.1979 |
| SCC/O-M/1074 | M/S. SIDHIS INTERNATIONAL Export & Imports | Mr. SIVAKUMAR S A | 9940346059 | 24.09.1982 |
| SCC/O-M/1052 | M/S. LAKSHMI ASSOCIATES | Mr. C.R. RAMACHARY | 8220358211 | 30.09.1960 |

பிறந்த நாள் காணும் சேம்பர் உறுப்பினர்கள் அனைவருக்கும் சௌராஷ்டிர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்

# முடங்கிய தொழில்களை உயிர்ப்பித்த வித்தகர்

நிறுவனத்தைப் பற்றிய நற்பெயர், இமேஜ், பொசிஷனிங் ஆகிய மூன்றும் லாபத்தை விட முக்கியமானது

பஞ்சாப் மாநிலம் லூதியானா நகரத்தெருக்களில் சைக்கிளில் மண்ணெண்ணெய் விற்றுக்கொண்டிருந்த ஹிமத் ராய் குப்தா, வெறும் 10 ஆயிரம் ரூபாயுடன் டெல்லிக்கு வந்து ஒரு வர்த்தகராக தனது வாழ்க்கையை ஆரம்பித்தவர். இன்று இந்தியாவிற்கு விளக்கேற்றும் பிராண்டாக விளங்கும் 17 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள **"ஹேவல்ஸ்"** என்ற நிறுவனத்தை கட்டியெலுப்பிய கதைதான் **Havels**, The Untold Story of Qimmat Roy Gupta. இந்த புத்தகத்தை அவரது மகனும் தற்போதைய 'ஹேவல்ஸ்' நிறுவனத்தின் தலைவருமான அனில் ராய் குப்தா எழுதி இருக்கிறார்.

மருமகனின் ஆர்வத்தைக் கண்ட மாமா அவரது கடையில் ஹிமத்தை பார்ட்னராக சேர்த்துக்கொண்டார். வியாபாரம் சூடு பிடிக்கத் தொடங்கியது. ஆனால், குறைந்த வருமானம் ஹிமத்தின் லட்சியத்தையோ ஆர்வத்தையோ பூர்த்தி செய்வதாக இல்லை. என் வழி தனி வழி என்று மாமாவிடமிருந்து பிரிந்தார்.

அந்த நேரத்தில் கையகப்படுத்தப்பட்டது தான் **ஹேவல்ஸ்** என்ற பிராண்ட். ஹவேலி ராம் காந்தி என்ற குடும்பத்தினர் 1948ம் ஆண்டு பதிவு செய்த பிராண்டுதான் 'ஹேவல்ஸ்'.

அறுபதிகளின் தொடக்கத்தில் வெளிநாட்டிலிருந்து சுவிட்ச் கியர், ஸ்டார்ட்டர் மற்றும் மீட்டர்களை இறக்குமதி செய்து ஹேவல்ஸ் பிராண்டில் விற்றுக்கொண்டிருந்த ஹவேலி ராம் நிறுவனம், மொரார்ஜி தேசாய் நிதியமைச்சராக இருந்த போது இறக்குமதி கோட்டாக்களை ரத்து செய்ததன் காரணமாக தானே சொந்தமாக தயாரிப்பதற்காக தொழிற்சாலை தொடங்கியது.

குடும்பக் காரணங்களால் தொழிற்சாலையும் வியாபாரமும் சரிவர கவனிக்கப்படாததால் நிறுவனத்தின் தரமும் வியாபாரமும் சரியத் தொடங்கின. இந்த சமயத்தில், அதாவது 1971-ம் ஆண்டில், தொழிற்சாலையை வாங்காமல் வெறும் **டிரேட் மார்க்**கையும் **பிராண்ட்** பெயரை மட்டும் விலைக்கு வாங்கினார் ஹிமத். தனது சொந்த தயாரிப்புகளை ஹேவல்ஸ் பிராண்ட் பெயரில் விற்க ஆரம்பித்தார்.

இது போல நலிவடைந்த வேறு சில நிறுவனங்களையும் அவர் வாங்கினார். அனைத்தையும் லாபமிக்கதாக மாற்றிக்காட்டினார். உள்நாட்டில் நலிந்த தொழிற்சாலைகளை கையகப்படுத்தி லாபகரமாக மாற்றிய ஹிமத், 2007-ம் ஆண்டு ஐரோப்பாவிலுள்ள 'சில்வேனியா' என்னும் தொழிற்சாலையை கையகப்படுத்தினார். அது மற்ற இந்திய தொழில்நிறுவனங்களை வியக்கவைத்தது. ஏற்கனவே நம்ம ஊரில் 'லஷ்மண் சில்வேனியா' என்ற பெயரில் பிரபலமாக இருந்த மின் விளக்கு நிறுவனத்தின் தாய்தொழிற்சாலைதான் அது.

ஐரோப்பிய சந்தையில் போதுமான அனுபவம் இல்லாததும், மின்விளக்கு சந்தையைப் பற்றிய புரிதல் குறைவாக இருந்ததும், போதாக்குறைக்கு 2008-ம் ஆண்டில் உலகத்தையே புரட்டிப்போட்ட பொருளாதார மந்தம் காரணமாக சில்வேனியா கையகப்படுத்தல் ஹேவல்ஸை நஷ்டத்தில் தள்ளியது.

நிறுவனத்தை லாபகரமாக மாற்றுவதற்காக ஹிமத் மேற்கொண்ட முயற்சிகள் பிரமிக்கவைக்கும் படிப்பனை என்றால் அது மிகையாகாது. பிறரை அதிகமாக விமர்சிக்காமல், பாராட்டுக்களை உடனடியாக வழங்குவது, பிறர் மீது அக்கறை காட்டுவது, அவர்களுக்கு உரிய முக்கியத்துவம் கொடுப்பது, மரியாதையுடன் நடத்துவது, பிறரின் தவறுகளை ஏற்றுக்கொள்வது போன்ற நேர்மறையான அணுகுமுறையால் ஹமத் ராய்க்கு எதிரிகளே கிடையாது என்று அவரை நன்கு அறிந்தவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

நிறுவனங்களும் பிராண்டுகளும் வாடிக்கையாளர்கள் மத்தியில் உருவாக்கும் பிரமிப்பு மற்றும் மரியாதை காரணமாகவே தொடர்ந்து சந்தையில் நீடித்திருக்கின்றன. தரமான பொருள்களை வழங்கும் ஒரு பிராண்டாகவே தனது நிறுவனம் அறியப்பட வேண்டும் என்பது இலக்கு. நிறுவனத்தைப் பற்றிய நற்பெயர், இமேஜ், பொசிஷனிங் ஆகிய மூன்றும் லாபத்தை விட முக்கியமானது என்று ஹிமத் அடிக்கடி கூறுவார்.

பொதுவாக ஒரு நிறுவனத்தை உருவாக்கி வெற்றிகரமாக நடத்துவது ஒரு ரகம் என்றால், நலிவடைந்த நிறுவனங்களைக் கொண்டு ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கிய ஹமத்தின் கதை இன்னொரு ரகம். அந்தவகையில் தொழில் செய்ய விரும்புபவர்களும், மேலாண்மை பயிலும் மாணவர்களும் அவசியம் படிக்க வேண்டிய புத்தகம் இது.

# தமிழ்நாடு வணிக நலவாரியம்

## இணையதள பதிவு மற்றும் புதிய அறிவிப்பு

ந.க.757/2021/அ2

உதவி ஆணையர் (வ.வ.)அலுவலகம்,
திருப்பரங்குன்றம் வட்டம்,
மதுரை.
நாள் - 05.08.2021

அறிவிப்பு

| | |
|---|---|
| பொருள் : | பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - தமிழ்நாடு வணிகநலவாரியம் - புதிய உறுப்பினர்களை இணைப்பது - இணையதளத்தில் பதிவு செய்து உறுப்பினராக இணைவது - அறிவிப்பு வழங்குவது - தொடர்பாக |
| பார்வை : | 1.முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.14/2021, TWB/41-3/2021, நாள்-14.07.2021<br>2.இணை ஆணையர்(மா.வ) மதுரைக்கோட்டம் அவர்களின் ந.க.எண்.6022/2021/அ16 நாள் - 03.08.2021 |

-@@@@@-

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சரக்கு மற்றும் சேவை வரி எண் பெற்று வருடத்திற்கு ரூ. 40,00,000 (நாற்பது லட்சத்திற்கு) குறைவாக வியாபாரம் செய்யும் வணிகர்கள் மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி எண் பெறாமல் வருடத்திற்கு ரூ. 40,00,000 (நாற்பது லட்சத்திற்கு) குறைவாக வியாபாரம் செய்யும் வணிகர்கள் ஆகியோர் தமிழ்நாடு வணிக நலவாரியத்தில் உறுப்பினராக இணைவதற்கான ரூ. 500/-ஐ 15.07.2021 முதல் மூன்று மாதங்களுக்கு தள்ளுபடி செய்துள்ளார்.

புதிய உறுப்பினர்களாக இணைய விரும்புவோர் https://www.tn.gov.in/tntwb/tamil என்ற இணையதளத்தில் சென்று பதிவு செய்யவும். இதில் எவ்வாறு இணைவது என்பதற்கான பின்வரும் வழிமுறைகள் வழங்கப்படுகின்றன.

1. சரக்கு மற்றும் சேவை வரி எண்ணைக்கொண்ட GSTIN வணிகர்கள் பதிவு செய்ய விண்ணப்பித்தால் தமிழ்நாடு வணிக நலவாரியத்தில் எந்தவித சரிபார்ப்பும் செய்யப்படாமல் தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு வணிக நலவாரியம் ஒப்புதல் வழங்கும்.

2. சரக்கு மற்றும் சேவை வரி எண் அல்லாத வணிகர்கள், உள்ளாட்சி அமைப்பு வழங்கிய வணிக உரிமத்துடன் பதிவு செய்ய வேண்டும். அவ்வாறு பதிவு செய்யும் போது ஆரம்ப கட்டத்தில் வணிக நல வாரியத்தின் தலைமை செயல் அலுவலர் உறுப்பினருக்கான ஒப்புதல் வழங்கலாம். பின்பு, சம்பந்தப்பட்ட வரிவிதிப்பு வட்டத்தைச் சேர்ந்த அலுவலர்கள் வணிகரது இடத்திற்கு நேரில் சென்று வணிக உரிமத்தின் உண்மைத் தன்மையையும், இடத்தையும் ஆய்வு செய்து பரிந்துரையுடன் கூடிய சரிபார்ப்பு அறிக்கையை வணிக நல வாரியத்தின் தலைமை செயல் அதிகாரிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

3. அனைத்து அதிகாரிகளும் இந்த திட்டத்தை தங்கள் அறிவிப்பு பலகையில் விளம்பரப்படுத்த வேண்டும். வணிகர்ள் சங்கத்தை தொடர்பு கொண்டு, அவர்கள் உறுப்பினராவதற்கான விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். தேவைப்பட்டால், அதிகாரிகள், வரிகட்டுவோர், பதிவு பெறாத வணிகர்கள் மற்றும் சிறு வணிகர்கள் ஆகியோரைச் சந்தித்து தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராவதற்கு வசதி செய்து தரலாம்.

4. துணை ஆணையர்கள் (மா.வ.) அவர்கள் அனைத்து வரிவிதிப்பு வட்டங்களிலும் help desk இயங்குவதை உறுதி செய்ய வேண்டும். மேலும் புதிய உறுப்பினர்கள் சேர்க்கைக்காக தொடர்புடைய வணிகர் மற்றும் வணிகர் சங்கங்கள் மூலமாக சிறப்பு இயக்கி (Special drive) நடத்த வேண்டும்.

5. பதிவு பெற்ற வணிகர்கள், பதிவு பெறாத வணிகர்கள் மற்றும் சிறு வணிகர்கள் இணைய தளம் வழியாக விண்ணப்பம் தாக்கல் செய்யவோ மற்றும் ஆவணங்கள் பதிவேற்றம் செய்யவோ வரிவிதிப்பு வட்டத்தை அணுகும் போது வரிவிதிப்பு வட்ட அலுவலர்கள் எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். மேலும் online பதிவு செய்ய வேண்டிய வசதியை செய்து தர வேண்டும்.

6. புதிய விண்ணப்பதாரர்கள் manual விண்ணப்ப படிவத்தை இணைய முகப்பிலிருந்து (Portal) பதிவிறக்கம் செய்வதற்கான வசதியையும், விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரர் தொடர்பாக உள்ள விபரங்களைப் பூர்த்தி செய்யவும், விண்ணப்ப படிவம் மற்றும் அது தொடர்பான ஆவணங்களை வரிவிதிப்பு வட்டங்களிலிருந்து பதிவேற்றம் செய்யவும் வரிவிதிப்பு வட்டங்களின் தலைமை அலுவலர் வரிவிதிப்பு வட்டங்களுக்கு போதுமான வசதி செய்து தர வேண்டும். மேலும், புதிய உறுப்பினர் எண்ணை உருவாக்க manual விண்ணப்ப படிவத்தில் உள்ள விபரங்கள் வரிவிதிப்பு வட்டங்களால் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டதை உறுதி செய்ய வேண்டும். ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்ட வணிக உரிமத்திற்கான உண்மைத்தன்மை, வியாபாரத்தின் இருப்பிட தொடர்பான சரிபார்ப்பு ஆய்விற்கு பின்னர் பெறப்பட்ட manual விண்ணப்ப படிவத்தை தமிழ்நாடு வணிக நல வாரியத்தில் தலைமை செயல் அதிகாரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

7. புதிய உறுப்பினர் எண் ஒதுக்கீட்டிற்குப் பின்னர், பதிவிற்கான இ–சான்றிதழ் (e-certificate) விண்ணப்பதாரரின் பதிவு செய்யப்பட்ட மின் அஞ்சல் (e-mail) முகவரிக்கும், பதிவு செய்யப்பட்ட கைப்பேசி எண்ணிற்கும் அனுப்பப்பட வேண்டும். தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் மூலம் அடையாள அட்டை பின்னர் வழங்கப்படும்.

- எஸ்.எம். கார்த்தி குமரன், செல்: 94438 31496



## வருங்காலத்தை வடிவமைக்கும்
# மெக்கட்ரானிக்ஸ்

எல்லாப் பொறியியல் பிரிவுகளையும் உள்ளடக்கிய ஒரு பொறியியல் படிப்பு இருந்தால் எப்படி இருக்கும்?. அதுதான் **மெக்கட்ரானிக்ஸ்**. யஸ்கவா என்கிற ஜப்பானிய நிறுவனத்தைச் சேர்ந்த மூத்த பொறியாளர் **டெட்சுரோ மோரி** என்பவரால் 1969ம் ஆண்டு 'மெக்கட்ரானிக்ஸ்' என்கிற வார்த்தை உருவாக்கப்பட்டது.

'மெக்கட்ரானிக்ஸ்' என்பது மெக்கானிக்கல், எலக்ட்ரானிக்ஸ் ஆகிய இரண்டு பொறியியல் பிரிவுகள் இணைந்த துறை. அத்துடன் கணினிப் பொறியியல், மென்பொருள் பொறியியல், கட்டுப்பாட்டுப் பொறியியல், அமைப்பை வடிவமைக்கும் பொறியியல் போன்ற இதர பிரிவுகளும் அதில் அடங்கியுள்ளன. பொறியியல் பிரிவுகளின் எல்லைகளைத் தகர்த்து, அவற்றை ஒன்றிணைந்து, பொறியியலை ஒரே பிரிவாக மெக்கட்ரானிக்ஸ் மாற்றியுள்ளது எனலாம்.

**காலத்தின் தேவை:** இன்றைய நவீன யுகத்தில், மக்களின் பயன்பாட்டில் இருக்கும் எல்லா சாதனங்களும் அறிவியலின் அசாத்திய கண்டுபிடிப்புகளும் தனிப்பட்ட ஒரு பொறியியல் பிரிவை மட்டும் சார்ந்தவையாக இல்லை. பலதரப்பட்ட பொறியியல் பிரிவுகளின் ஒத்திசைவால், அவற்றின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு இடையிலான இணக்கத்தால் அவை உருவாக்கப்படுகின்றன. இந்தத் தேவையிலிருந்து உருவானதே மெக்கட்ரானிக்ஸ். மெக்கட்ரானிக் தொழில்நுட்பத்துக்குச் சிறந்த உதாரணமாக நம்முடைய வீட்டிலிருக்கும் சலவை இயந்திரத்தையோ தொழிற்சாலையிலிருக்கும் சி.என்.சி இயந்திரத்தையோ கூறலாம்.

**மெக்கட்ரானிக்ஸ் சிறப்பு:** எந்தவொரு பொறியியல் பிரிவாக இருந்தாலும், வடிவமைப்பே அதன் தொடக்கப் புள்ளி. பல்வேறு பொறியியல் பிரிவுகளைச் சார்ந்திருக்கும் இன்றைய கண்டுபிடிப்புகளின் வடிவமைப்புக்கு, எல்லாப் பொறியியல் பிரிவுகளையும் ஒரே நேரத்தில் அணுகும் போக்குத் தேவை. அதற்கு எல்லாப் பொறியியல் பிரிவுகளையும் குறித்த அறிவும், தெளிவும் தேவை. இந்தத் தேவையை மெக்கட்ரானிக்ஸ் படிப்பு பூர்த்தி செய்கிறது. ஒரு சிக்கலான கண்டுபிடிப்பில், பல்வேறு பொறியியல் பிரிவுகளுக்கு இடையிலான இணைப்புகளையும், அந்த இணைப்புகளைத் தேவைக்கு ஏற்ப கட்டுப்படுத்தும் திறனையும் மெக்கட்ரானிக்ஸ் பொறியியலாளர்கள் கொண்டுள்ளனர். ஒரு கண்டுபிடிப்பில் உள்ள குறைகளை முன்கூட்டியே அறிவதற்கும், தேவைப்பட்டால் வடிவமைப்பை மறுபரிசீலனை செய்வதற்கும் விரைவான தயாரிப்புக்கும் இத்தகைய திறன் உதவுகிறது.

**ரோபாட்டிக்ஸ் வேறு:** 'ரோபாட்டிக்ஸ்' படிப்பை போன்றே 'மெக்கட்ரானிஸ்' உள்ளதே என்று தோன்றலாம். தொழிற்சாலைகளில் ஏற்பட்ட தொழில்நுட்பத் தேவைகளின் அடிப்படைகளில் உருவான பொறியியல் பிரிவு மெக்கட்ரானிக்ஸ். ரோபாட்டிக்ஸ் என்பது, மனிதனின் கட்டளைகளுக்கு அடிபணிந்து எந்நேரமும் செயலாற்றத் தயாராக இருக்கும் இயந்திரங்கள் குறித்த புனைவுகளின் உந்துதலால் ஏற்பட்டது.

மெக்கட்ரானிக்ஸ் பிரிவின் பல்வேறு கூறுகளையும் ரோபாட்கள் கொண்டிருப்பதால், ரோபாட்டிக்ஸை மெக்கட்ரானிக்ஸ் அமைப்பின் அங்கமாகக் கருதலாம். இருப்பினும் மெக்கட்ரானிக்ஸ் உடன் ஒப்பிடும்போது ரோபாட்டிக்ஸில் தொழில்நுட்ப ஆராய்ச்சிகளுகம் ஆய்வறிக்கைகளும் முதிர்ச்சியைடந்தவையாக உள்ளன. ஒரு பொருளைப் பார்க்கும் போது, அதில் அங்கமாக இருக்கும் பல்வேறு பிரிவுகள், அவற்றுக்கு இடையிலான தொடர்புகள், ஒத்திசைவுகள் ஆகியவற்றை உணர்ந்து அறியும் திறன் மெக்கட்ரானிக்ஸ் பொறியாளர்களுக்கு உண்டு.

இதனால்தான், அடுத்த தலைமுறை ஆட்டோமேஷன் சம்பந்தப்பட்ட தயாரிப்புகளை உருவாக்குவதில் முக்கியப் பங்கை அவர்கள் வகிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- தி இந்து(த)


ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)



Cell: 90805 54802, 99424 90217

Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com



# ஏற்றுமதியில் ஆர்வம் உள்ளவர்கள் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விபரங்கள்

ஏற்றுமதி மட்டுமல்ல இறக்குமதி தொழில் தொடங்கவும் ஆங்கில அறிவு மிக அவசியம். அதே போல் இந்திய அரசின் வெளிவர்த்தகக் கொள்கையையும், எந்த நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்போகின்றீர்களோ அந்த நாட்டின் வர்த்தக வரிக் கொள்கைகளை அறிந்திருப்பது நல்லது. கீழ்கண்ட 10 குறிப்புகளை படித்து மனதில் நிறுத்திக் கொள்ளுங்கள்.

1. பல நாடுகளின் தூதர்கள், துணைத் தூதர்கள் இந்தியாவில் உள்ளனர். அவர்களது கமர்சியல் செயல்களுடன் நேரிலும், தபாலிலும், மின்னஞ்சலிலும் தொடர்பு கொண்டு அந்த நாட்டுடனான வர்த்தகம் பற்றி, ஆர்டர் பெறுவது பற்றி, அறியுங்கள்.

2. வெளிநாடுகள் அனைத்திலும் இந்திய தூதர்கள் உள்ளனர். அவர்களுடன் தொடர்பு கொண்டு ஆலோசனை, உதவி, இறக்குமதி, ஏற்றுமதியாளர்களின் விலாசங்கள் அறியலாம்.

3. இந்திய அரசின் ஏற்றுமதி, இறக்குமதிக்கு வரி விதிப்பது கஸ்டம்ஸ் துறை ஆகும். எந்த பொருளுக்கு என்ன வரி, ஏதேனும் சலுகை உண்டா, ஏற்றுமதியாளர்களுக்கு மூலப்பொருள் இறக்கும் பொழுது வரி உண்டா என்பது போன்ற விஷயங்களை அவ்வப்பொழுது தெரிந்து கொள்ள வேண்டும்.

4. பல நாடுகள், பல நாடுகளுக்கு வர்த்தக தடை விதித்துள்ளன. உதாரணமாக அமெரிக்கா, கியூபாவுக்கும், பல நாடுகள் சிரியாவுக்கும், சில நாடுகள் ஈரானுக்கும் பொருளாதார தடைகள் விதித்துள்ளன. இத்தகவல்களை அறிந்திருக்க வேண்டும்.

5. ஏற்றுமதி, இறக்குமதியாளர்களுக்கு கொடவுன் ஏற்பாடு, வரி கட்டுதல், கிளியரன்ஸ் செய்து பொருட்களை வெளியே கொண்டு வருதல், ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு (ECGC - Export Credit Guarantee Corporation Ltd.) ஏற்றுமதி கடன் உத்திரவாத கழக பாலிசி எடுத்தல் போன்ற வேலைகளுக்கு சுங்க அலுவலக அங்கீகாரம் பெற்ற ஷிப்பிங் / பார்வேர்டிங் ஏஜெண்டுகள் துறைமுக / விமான நிலைய நகர்களில் இருப்பர். சிறந்த தரமான நிறுவனத்துடன் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும்.

6. வெளிநாடுகளில் இருந்து ஆர்டர்கள் பெற, உங்கள் பொருட்களை (சாம்பிள் அனுப்ப), உங்களை பிரபலப்படுத்த, வெளிநாட்டு கண்காட்சிகளில் கலந்து கொள்ள அது சார்ந்த பொருட்களுக்கு மத்திய அரசு உருவாக்கியுள்ள ஏற்றுமதி வளர்ச்சிக் கவுன்சில்களில் / போர்டில் உறுப்பினராக வேண்டும். உதாரணம்: பிளாஸ்டிக் எக்ஸ்போர்ட் புரமோசன் கவுன்சில், விவசாய பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையம், தென்னை வளர்ச்சி வாரியம் போன்றவை.

7. எந்த பொருள் ஏற்றுமதி செய்தாலும் இன்சூரன்ஸ் (ECGC) செய்து அனுப்ப வேண்டும். Letter of Credit (L.C.) கடன் உத்திரவாத கடிதம் அந்த நாட்டு வங்கியிலிருந்து வரும். அது வந்தால் மட்டுமே அனுப்ப வேண்டும்.

8. இறக்குமதி தொழில் செய்யும் போது விலை, பொருளுக்கு கஸ்டம்ஸ் வரி, லாரி வாடகை, தமிழ்நாட்டு விற்பனை வரி சேர்த்து, பின் லாபம் சேர்த்து விற்பனை விலை நிர்ணயம் செய்ய வேண்டும். கவனமாக இருக்க வேண்டும்.

9. எந்த இறக்குமதியாளரும் உங்களை அணுகினால், அவர் பற்றி முழுமையாய் இந்திய தூதர், ECGC Ltd. மூலம் அறிந்தபின் ஏற்றுமதி செய்யுங்கள்.

10. பொருளின் தரம் பற்றி வெளிநாட்டினர் மிக கவனமாய் இருப்பர். ஒரு பொருள் தரமில்லை என்று 1000 பீஸ்களை கூட திருப்பி அனுப்பி விடுவர். எனவே என்றும் தரத்தில் கவனம் தேவை.

– தொழில் நேசன்


ஸ்ரீ முருகன் துணை

K.S. மோகன்லால்



ஹரிலால்

பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்

குறிப்பிட்ட நேரத்தில் டெலிவரி செய்யப்படும்

98430 72626
98425 72626

* செங்கல்
* மணல்
* ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
* கிராவல்
* கிரஷர் தூசி
* சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
* உடைகல்



No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை – 9



# 75வது ஆண்டு சுதந்திர தின நல்வாழ்த்து உரை

நம்மை அடிமைப்படுத்தியிருந்த வெள்ளையர்களிடமிருந்து நமது பாரத தேசம் சுதந்திரம் பெற்று 75ம் ஆண்டுகள் ஆகிறது. என்றாலும், கடந்த ஆயிரம் ஆண்டுகளாக, அந்நியசக்திகள் நம் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் அசைத்து பார்த்துள்ளது. நாட்டின் மண் வளங்கள் பல சுரண்டப்பட்டாலும், பாரதப் பிரஜைகள் ஒவ்வொருவரின் மனவளம் குன்றாது, சுருங்காது அடுத்தவரின், அண்டை அயலார் மீதான நலனில் அக்கறை இருக்கவே செய்கிறது.

மிகப்பெரிய உதாரணமாக, கொரோனா நோய் தொற்றினால் பல நாடுகளில் மக்கள் அவதியுற்று வந்த தருணத்தில், நமது பாரதப் பிரதமர் அவர்கள், அண்டை நாடுகளுக்கு தடுப்பூசியை அளித்து உதவியதன் மூலம் உலக நாடுகளில் நம் நாட்டின் பெருமை உயர்ந்தது. அதன் பிரதிபலனாக, நமக்கு போதிய தடுப்பூசி இல்லாத சமயத்தில் மிகப்பெரிய நாடு ஒன்று உடனடியாக உதவிக்கரம் நீட்டியது என்பதை அனைவரும் அறிவோம். இதற்கு அடித்தளம், ஆலமரம் போல இருக்கும் நம் கலாச்சாரமும், பண்பாடும் நமக்குக் கற்றுத் தந்த பாடம் தான் காரணம்.

**சுதந்திரம் என்பது எல்லை மீறுவது அல்ல: எல்லைகளை விரிவு செய்வது.** ஆகவே, நம் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் பேணி வளர்த்து மதித்து மகிழ்ந்து வாழ்வோம். சுற்றமும், நட்பும் நம்மை போற்றும்.

அடிமைப்பட்டுக்கிடந்த நம் பாரத தேசம், இன்று, கல்வி, விஞ்ஞானம் ஆகியவற்றில் மிகச்சிறந்து விளங்குகிறது. உலக அளவில் பாரதம் தலை நமிர்ந்து நிற்கிறது என்னும்போது சுதந்திரத்தின் பலனை இந்த 75வது ஆண்டில் அடைந்துவிட்டோம் என்று எண்ணத்தோன்றுகிறது. மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்கள் கூறியது போல, 2020ல் இந்தியா ஒளிர்கிறது. அனைவருக்கும் சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்.

**ஒன்றுபடுவோம்! தேசம் காப்போம்! ஜெய்ஹிந்த்!!!**



भारत सरकार/GOVT. OF INDIA
श्रम एवं रोजगार मंत्रालय/Ministry of Labour & Employment
कर्मचारी राज्य बीमा निगम /Employees' State Insurance Corporation
उप क्षेत्रीय कार्यालय, मदुरै Sub Regional Office (Madurai)

**IMPLEMENTATION OF ESI SCHEME**

Government of India, Ministry of Labour & Employment has implemented the ESI Scheme in the entire area of Madurai District w.e.f. **01.08.2021** vide Gazette of India Notification No. S.O. 2983(E) dated 28.07.2021.

All Factories / Establishments / Educational Institutions / Hospitals in Madurai District having employment strength of 10 or more are comes under the ESI Act. Hence, the employers of such units, which are not covered earlier, are requested to register their Factories / Establishments / Educational Institutions / Hospitals under the ESI Act immediately and start compliance.

For further details, feel free to contact Sub Regional Office, Madurai or nearest Branch Office.

**DEPUTY DIRECTOR I/C.**
**MADURAI SUB REGION**

For More details - Contact: **L.V.JOTHI PRAKASH**
Advocate & Labour Law Consultant,
Madurai.
Mobile No : 98422 64144.

*Courtesy: The Hindu (E) dtd. 10.08.2021*

ஜவுளித்துறை அமைச்சகத்தால்

## நெசவாளர்களின் நலனுக்காக நடத்தப்படும் திட்டங்கள்

நாடு முழுவதும் கைத்தறியின் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் நெசவாளர்களின் நலனுக்காக கீழ்கண்ட திட்டங்கள் ஜவுளித்துறை அமைச்சகத்தால் நடத்தப்படுகின்றன:-

1. தேசிய கைத்தறி வளர்ச்சி திட்டம் (NHDP)
2. விரிவான கைத்தறி தொகுப்பு வளர்ச்சி திட்டம் (CHCDS)
3. கைத்தறி நெசவாளர்களின் விரிவான நலத்திட்டம்
4. நூல் விநியோக திட்டம் (YSS)

மேற்கண்ட திட்டங்களின் கீழ், கச்சாப் பொருட்கள், தறிகள் மற்றும் துணைப் பொருட்கள், புதுமையான வடிவமைப்பு, உள்கட்டமைப்பு வளர்ச்சி, திறன் மேம்பாடு, கைத்தறி பொருட்களின் விற்பனை போன்றவற்றுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
SRB சில்க்ஸ் பொட்டிக்
100 YEARS SRB SINCE 1901
எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்
158 & 158A தெற்கு மாசி வீதி, மதுரை-1. CELL: 92445 00633 | 99433 79499

EXPRESS BRIYANI
Cell: 63852 96296
Anna Nagar | B.B. Kulam
Kalavasal | Villapuram
South Marret Street

மற்றவர்களிடமிருந்து ஆறு அடி இடைவெளிவிட்டே இருங்கள்.

भारतीय डाक
Indian Post




# தபால் நிலையத்தில் பாஸ்போர்ட் சேவை

நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் சர்வதேச பயணம் செல்ல மிக முக்கிய ஆவணமாக கருதப்படுவது பாஸ்போர்ட். இதனை அடையாள ஆதாரமாகவும் பயன்படுத்தப்படுத்தலாம்.

பாஸ்போர்ட் இந்திய குடிமக்களுக்கு மிக முக்கியமான ஆவணங்களில் ஒன்றாகும். வெளிநாடுகளில் இந்திய குடிமகன் என்பதற்கான ஒரே சான்றாக இருப்பது பாஸ்போர்ட் மட்டுமே.

பாஸ்போர்ட் பெறுவதற்கு முன்பு பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு நேரடியாக சென்று பெறும் வழக்கம் இருந்து வந்தது. ஆனால், இனிமேல் அதற்கான அவசியம் இல்லை. உங்கள் வீட்டுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்திலேயே விண்ணப்பிக்கலாம்.

நமது மத்திய அரசு, தபால் நிலையங்களை தபால் சேவைகளுக்காக மட்டுமல்லாமல், வங்கி சேவை வசதிகளையும் மக்களுக்காக ஏற்படுத்திக் கொடுத்து வரும் நிலையில், தற்போது, நாட்டின் தபால் நிலையங்களில் பாஸ்போர்ட் பதிவு மற்றும் பாஸ்போர்ட் விண்ணப்பம் போன்ற பல வசதிகளையும் மக்களுக்காக உருவாக்கியுள்ளது. இதன் மூலம் தபால் நிலையத்தின் சேவைகளை மத்திய அரசு மேலும் விரிவுபடுத்தியுள்ளது.

தபால் நிலையத்தின் பொதுவான சேவை மையம் (Common Service Centre) கவுண்டர்களில் பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பிக்கலாம். இந்த புதிய சேவை குறித்தத் தகவல்களை இந்தியா போஸ்ட் ட்விட்டர் பதிவில் வெளியிட்டுள்ளது. அதில், உங்கள் அருகிலுள்ள தபால் நிலைய சிஎஸ்சி கவுண்டரில் பாஸ்போர்ட்டுக்கு பதிவு செய்வதும், விண்ணப்பிப்பதும் சுலபம். மேலும் தகவலுக்கு உங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள தபால் நிலையத்தை அணுகவும் என்று குறிப்பிட்டுள்ளது. பல தபால் நிலையங்களில் ஏற்கனவே இருக்கும் பாஸ்போர்ட் சேவா மையம் அல்லது பாஸ்போர்ட் சேவா கேந்திராவிலேயே பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பிக்கலாம்.

இதுவரை, பாஸ்போர்ட் சேவா கேந்திராவுக்கு சென்றுதான் பாஸ்போர்ட் பெற வேண்டியிருந்தது. ஆனால் இப்போது உங்கள் அருகிலுள்ள தபால் நிலையத்திலேயே பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பிக்கும் வசதி வந்துவிட்டது.

**எப்படி விண்ணப்பிப்பது?**

passportindia.gov.in வலைதளத்தில் குறிப்பிட்டிருக்கும் தகவல்கள் இவை,

பாஸ்போர்ட் சேவை மையம் மற்றும் தபால் அலுவலக பாஸ்போர்ட் சேவை மையம் ஆகியவை பாஸ்போர்ட் அலுவலகத்தின் கிளைகளாகும். அவை பாஸ்போர்ட் வழங்குவதற்கான முன்கள சேவைகளை வழங்குகின்றன.

பாஸ்போர்ட் பெறுவதற்கான டோக்கன் முதல் விண்ணப்பம் வரை அனைத்து சேவைகளும் இந்த மையங்களிலேயே கிடைக்கும். நீங்கள் ஆன்லைனில் பாஸ்போர்ட்டுக்கு பதிவு செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

தேதி கிடைத்ததும், ரசீது மற்றும் பிற அசல் ஆவணங்களின் நகலுடன் பாஸ்போர்ட் சேவை கேந்திராவின் தபால் நிலையத்திற்கு செல்ல வேண்டும். இங்கே உங்கள் ஆவணங்கள் சரிபார்க்கப்படும்.

அதன் பிறகு உங்கள் பாஸ்போர்ட் தொடர்பான தகவல்கள் குறுஞ்செய்தி மூலம் வழங்கப்படும். இந்த செயல்முறைகளுக்கு சுமார் 15 நாட்கள் ஆகும்.


India Post
@IndiaPostOffice

Replying to @IndiaPostOffice

Now it's easy to register and apply for a passport at your nearest post office CSC counter. To know more, visit the nearest post office.
#AapkaDostIndiaPost

9:05 AM · Jul 24, 2021 · Twitter for Android

- இதழ் குழு








https://youtu.be/-JMVniVMLr0

# மத்திய அமைச்சரவையில்
# பெண்கள்...

கடந்த ஜூலை மாதம் 8ம் தேதி அன்று மத்திய அரசு 30 மத்திய அமைச்சரவை துறைகளில் 15 துறைகளுக்கு புதிய அமைச்சர்கள் மற்றும் இணை அமைச்சர்களை நியமித்தது. இதில், 7 புதிய பெண் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மத்திய அமைச்சரவையில் முன்னெப்போதும் இல்லாத வகையில் மொத்தம் 11 பெண்களுக்கு அமைச்சர் பதவி அளிக்கப்பட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடியின் முதல் ஆட்சியில், 9 பெண் அமைச்சர்கள் இருந்தனர். இதில், 6 பேர் கேபினட் அமைச்சர்கள். தற்போதைய ஆட்சியில், 11 பேர் அமைச்சர்கள். இந்த புதிய 7 பெண் அமைச்சர்களைப் பற்றி அறிவோம்.

**ஷோபா கரந்தலேஜே:-** இவர் கர்நாடக மாநிலத்தின் உடுப்பி சிக்மகலூர் தொகுதி மக்களவை உறுப்பினர். முதல்வர் எடியூரப்பாவின் நம்பிக்கைக்குரியவர். தற்போது இரண்டாவது முறையாக மக்களவை உறுப்பினராகப் பதவி வகிக்கிறார். கர்நாடாக மாநிலத்தில் எம்.எல்.ஏ., எம்.எல்.சி பதவிகளையும் வகித்துள்ளார். அந்த மாநில உணவு, கிராமப்புற வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சராகவும் இருந்துள்ளார். 30 ஆண்டுகால அரசியல் அனுபவம் உடையவர். புதிய அமைச்சரவையில் **வேளாண் துறை மற்றும் விவசாயிகள் நலன் துறை அமைச்சராகி உள்ளார்.**

**மீனாக்ஷி லேகி:-** இவர் புதுதில்லி மக்களவைத் தொகுதியில் இருந்த இரண்டாவது முறையாகவும் தேர்வாகியவர். இவர் ஆளும் கட்சியின் செய்தித் தொடர்பாளராக பணியாவற்றியவர். உச்ச நீதிமன்ற வழக்கறிஞர். சமூக சேவகராகவும் செயல்பட்டவர். புதிய அமைச்சரவையில் **வெளியுறவுத்துறை மற்றும் கலாச்சாரத் துறை இணை அமைச்சராக இவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.**

**தர்ஷனா விக்ரம் ஜார்டோஷ்:-** இவர் குஜராத்தைச் சேர்ந்தவர், ஆளும் அரசின் கட்சியின் முன்னோடி. 40 ஆண்டுகாலமாக பொது வாழ்க்கையில் உள்ளார். அவருக்கு **ஜவுளித்துறை மற்றும் ரயில்வே துறை இணை அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.**

**அன்னபூர்ணா தேவி:-** இவர் ஜார்கண்டைச் சேர்ந்தவர், மாநில பெண்கள், குழந்தைகள் அமைச்சராக பதவி வகித்தவர். ஜார்கண்ட், பீகாரில் 4 முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். தனது 30 வயதிலேயே பீஹார் அரசின் சுரங்கத் துறை அமைச்சராக இருந்தவர். முதன்முறையாக மக்களவைக்குத் தேர்வாகி உள்ளார். புதிய அமைச்சரவையில் **கல்வித்துறை இணை அமைச்சராகி இருக்கிறார்.**

**பாரதி பிரவின் பவார்:-** இவர் மகாராஷ்ட்ராவைச் சேர்ந்தவர். மருத்துவப் பயிற்சியாளர். நாசிக் மாவட்டத்தில் ஊட்டச்சத்து குறைபாடு, குடிநீர் பிரச்னையைத் தீர்ப்பதற்குப் பாடுபட்டவர். நாசிக் மாவட்டத்தில் உள்ள தனித் தொகுதியான, டின்டோரியில் போட்டியிட்டு முதல்முறையாக வென்றவர். இவருக்கு **குடும்பநல இணை அமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.**

**பிரதிமா பவுமிக்:-** மேற்கு திரிபுரா-வைச் சேர்ந்தவர். முதல் முறையாக எம்.பி., யாகியுள்ளார். அந்த மாநில பொதுச் செயலாளருமாவார். தனது முதல் மாத சம்பளத்தை அசாம் வெள்ள நிவாரண நிதிக்கு அளித்து பாராட்டுக்களைப் பெற்றவர். திரிபுராவில் இருந்து மத்திய அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள முதல் நபர். புதிய அமைச்சரைவையில் **சமூக நீதி மற்றும் மேம்பாடு துறையின் இணை அமைச்சராகி இருக்கிறார்.**

**அனுப்பிரியா சிங் படேல்:-** இவர், உத்தர பிரதேசத்தைச் சேர்ந்தவர். மிர்ஸாபூர் தொகுதியைச் சேர்ந்த மக்களவை உறுப்பினர். இரண்டாவது முறையாக எம்.பி ஆகியுள்ளார். பிரதமர் மோடி அவர்களின் முதலாவது அமைச்சரவையில் சுகாதாரத் துறை இணை அமைச்சராகப் பதவி வகித்தவர். தற்போது, **வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்.**


வாழ்வில் வளம் பெற!
வர்த்தகத்தில் வெற்றி பெற!!
வரம் TV
94430 34009
Google Play Store - ல் SCT app
மூலம் நேரடியாக கண்டுகளியுங்கள்...
விளம்பரங்கள் செய்து பயன் பெறுவீர்
Contact:
99408 25179
99424 17417
98421 91906
sctchannelmdu@gmail.com
GSTIN : 33ADWFS4457J1ZD

# ஸௌராஷ்ட்ர மொழி நூல் அரங்கம்

**நூல்: ஸ்ரீமந் நடன கோபால நாயகி ஸ்வாமிகள்**
**ஆசிரியர்: திரு. டி.வி.எஸ். மணியன்,**



**நூல் விளக்கம்:** இந்நூல், சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு முதல் பகுதியாக வைக்கப்பட்டுள்ளது. நாயகி ஸ்வாமிகளின் சுவாமிகளின் பிறப்பு, வைணவ மாற்றம், கீர்த்தனைகள் பாடுதல் என்று தொடர்ந்து முக்தியடைதல் வரை முதல் பகுதிய முற்றுப்பெறுகிறது. 1887ஆம் ஆண்டில் சென்னை பிரஸிடென்சி கல்லூரித் தமிழ் பேராசிரியர் திரு. ராஜகோபால் பிள்ளை அவர்கள் நாயகி சுவாமிகளின் தமிழ் கீர்த்தனைகளைத் தொகுத்து, முதல் பதிப்பாக வெளியிட்டுள்ளார். மின் பொறியாளரான இந்நூல் ஆசியரியர் 130 வருடங்கள் கழித்து 2017ம் ஆண்டில் நாயகி சுவாமிகளின் தமிழ் கீர்த்தனைகள் சிலவற்றுக்கு ஸௌராஷ்ட்ரீ மொழியில் மொழி மாற்றம் செய்துள்ளார். இந்நூலை மறைந்த புகழ்பெற்ற பட்டிமன்ற பேச்சாளர் திரு. தா.கு. சுப்பிரமணியன் மற்றும் பேராசிரியர் டாக்டர். T.R. தாமோதரன் ஆகியோர் பாராட்டியுள்ளனர்.


**நூல்: ஸம்பூர்ண ஸௌராஷ்ட்ரீ வியாகரனு**
(முழுமையான ஸௌராஷ்ட்ரீ இலக்கணம்)
**ஆசிரியர்: டாக்டர். கே.ஆர். விட்டல்தாஸ்**




**நூல் விளக்கம்:** இந்நூலில் ஸௌராஷ்ட்ரீ மொழி மற்றும் அதனுடைய லிபி பற்றிய வரலாறு சுருக்கமாக ஸௌராஷ்ட்ர மொழியில் எழுதப்பட்டுள்ளது. 21 அத்தியாயங்களைக் கொண்ட இந்நூலில் பெயர்ச் சொல், பிரதிப்பெயர்ச் சொல், பெயரடை, வினைச்சொல், இடைச்சொல், வாக்கியம், நிறுத்தற்குறிகள் மரபுச்சொற்கள், பழமொழிகள் முதலியவைகளைப் பற்றிய விரிவான தகவல்கள் அனைவருக்கும் புரியும் வண்ணம் எளிய ஸௌராஷ்ட்ரீயில் வழங்கப்பட்டுள்ளன. இதன் விலை ரூ. 200/– மட்டுமே. தொடர்புக்கு: 63795 88513 என்ற எண்ணிற்கு அழைக்கவும். இது மாணவர்களுக்கு பயனுள்ள நூல்.

**நூல்: சில மொழிகளில் பழமொழிகள்:**
**ஆசிரியர்: திரு. டி.வி.எஸ். மணியன்,**

**நூல் விளக்கம்:** இந்நூல் ஆங்கிலப் பழமொழி மற்றும் ஸௌராஷ்ட்ரீ மொழிப் பழமொழிகளைத் திரட்டி மொழிமாற்றம் ( 3 மொழிகளில்) செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 510 பழமொழிகள். முதல் பகுதி: ஆங்கிலப்பழமொழிக்கு இணையான தமிழ் பழமொழிகள் – ஸௌராஷ்ட்ரீயில் மொழிமாற்றம்; இரண்டாம் பகுதி: ஸௌராஷ்ட்ரீ பழமொழிகளின் நேரடி தமிழில் – ஆங்கில மொழிகளில் மொழி மாற்றம். மூன்றாம் பகுதி: ஆங்கிலப் பழமொழிகளை நேரடியாகத் தமிழிலும், ஸௌராஷ்டீரியிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளன. மேலும், தமிழ், ஸௌராஷ்ட்ரீ, ஆங்கில மொழிகளின் தோற்றம், வளர்ச்சி பற்றிய மூன்று கட்டுரைகளும் சேர்க்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு பயனுள்ள நூல். இந்நூலை 94862 58182 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.



## சுத்தமே சுகாதாரம்

* கைகளை அடிக்கடி கழுவ வேண்டும். ஏதேனும் பொருள் அல்லது பரப்பு ஆகியவற்றை தொடர நேர்ந்தால், உடனே கையை கழுவ வேண்டும்.
* சானிடைசர் இல்லையென்றாலும், சாதாரன சோப்பையும், நீரையும் பயன்படுத்தி கைகளை கழுவிக் கொள்ளலாம்.
* கைகளைச் சுத்தப்படுத்தாமல் வாய், மூக்கு, முகம் ஆகியவற்றை தொடக்கூடாது. சுற்றியுள்ள பொருட்கள் எதுவாக இருந்தாலும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.
* சிறிய மற்றும் நுண்ணிய மூச்சு அல்லது உமிழ்துளிகளில் வைரஸ் இருக்கக்கூடும். இவை காற்றில் பறக்கக்கூடும். இந்தப் பரவலைத் தடுக்க ஒருவருக்கொருவர் ஆறடி இடைவெளி அவசியம்.



வெளியில் செல்பவர்கள்
**N95 மாஸ்க்**-ஐ பயன்படுத்துங்கள்



வீட்டில் இருப்பவர்கள்
**டிரிப்பில் லேயர் மாஸ்க்**-ஐ
பயன்படுத்தங்கள்


**AWARDS**
Raj Tv
Vasanth Tv
Vijay super
Vijay Tv
Tms Award

**ROYAL ROMANTIC**
No.7, Pacharisikara thoppu cross street,
Kamarajar Salai, Opp to Old Dhinamani Theatre,
Madurai-9. Tamilnadu.
Website : www.bestnumerologist.com
Youtube / Google Map / Whatsapp Link : 9842111411

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர்
ஏகலை எண்கணிதன்
உலக அளவில் ஸௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்

"ஷர்வ ரக்சன்" MRS
BEST NUMEROLOGIST

பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு
அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வஷியம் மிகுந்த பெயர்
"எண் கணித ஜோதிட" முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும்
திருமணப் பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்

FOR APPOINTMENT
**98421 11411**





Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 136, East Veli Street, 2nd Floor, Madurai - 625 001.
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

JSW COLOURON+ கூரைகள்

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj®

RIGID PVC PIPES,FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

Trust us with all your Electrical Plumbing and Agri needs...



மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

DASU SINCE 1993

நியூ தாசு மெட்டல்ஸ்

NEW DASU METALS

25 Years ANNIVERSARY

BRASS AND COPPER POOJA ARTICLES, UTENSILS, STATUES, WHITE METAL HANDICRAFTS, SS VESSELS, TROPHIES, SHIELDS AND GIFT ARTICLES.

254, KAMARAJAR SALAI (NEAR ARASAMARAM),MADURAI - 09)

0452 4368753 | New Dasu Metals | newdasumetals

www.newdasumetals.com



Plan & Built

Plan & Built

Civil Construction & Interior

DTCP APPROVED LAYOUT

ம.வ(மு) ந.ஊ.து.இ.எண்: 599/2018

GOLDEN CITY

இராமு சீதா பாலிடெக்னிக் எதிரில், காரியாபட்டி.

12.5 லட்சம் முதல் தனித் தனி வீடுகள்

2.15 லட்சம் முதல் வில்லா பிளாட்டுகள்

Contact : 8754660660, 9745520920, 9962295452

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

Office : 163-A2, First Floor, Thamgam Nagar, Ganesh Theater Signal, Kamarajar Salai, Madurai - 625 009.

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2019-2021
Printed Matter

Date of Posting : 20.08.2021 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2019 - 2021
Date of Publication 20th of Every Month

info@onvgprint.com
+91 95 97 775 775
FOLLOW US ON

எல்லா விதமான பிரிண்டிங் தேவைக்கு....

**onVGPrint.com**

— A unit of VIGNESH GRAPHICS —

visit :
www.onvgprint.com

79-A, South Marret Street, Madurai - 625 001. | 33, Manjanakara Street, Madurai - 625 001. | 48/5, TNHB Colony, Mela Anuppanadi, Madurai - 625 001.

Mobile : 93441 01432, 98434 14310 Email : vgmadurai1@gmail.com

VSOC Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy, Joint Replacement

# வேல் மருத்துவமனை

## வேல் சிறப்பு எலும்பியல் மையம்

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

VALE HOSPITAL

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com



Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.

24hrs Service




**சிறப்பம்சங்கள்**

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

*Experience the Expertise Advice*

**உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்**

- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள் » மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

» மூட்டு நுண்துளை சிகிச்சை » விபத்து அறுவை சிகிச்சை
» முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை » விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

# கைத்தறியில் ஓர் புதுமை

## Electronic Jacquard




**Technical Details :**

- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm





**Applications :**
• Sarees • Bed Sheets • Furnishing • Dress Material
• Blankets • Made Ups • Shirting



N.S. Rajan

## SRE CORPORATION

359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 460 64, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com



T.S. Saravanan

*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, II Floor, East Veli Street, Madurai - 625001.
Ph: 0452 2629955, Cell: 9344197952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.org